பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 06, செவ்வாய்க்கிழமை 22.08.2017 கதிர் 289

## அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன படைகளின் பிரதானியாக நியமனம்



கொழும்பு, ஓக.22

இதுவரை கடற்படையின் தளபதியாகப் பணியாற்றி வந்த வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனா, இன்று முதல் அட்மிரலாகப் பதவி உயர்வு பெற்றுள்ளமையுடன் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவினால் பக்கம் 18

## குணசீலனுக்கு சுகாதார அமைச்சு வழங்கத் தீர்மானம்

# 4 பேர் அமைச்சரவையை அமைக்க முதல்வர் முடிவு





### டெனீஸ்வரனுக்கு அதில் இடம் கிடையாது அவரது இடத்துக்கு நியமனமும் இல்லை

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 22

வடக்கு மாகாண சபையின் ஐந்து அமைச்சர்கள் வாரியக் குழாமை தற்போதைக்கு நான்காகப் பேணுவதற்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தீர்மானித்திருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

ரெலோவின் சார்பில் மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட குணசீலனுக்கு சுகாதார அமைச்சை வழங்கவும், அவரையும் சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன் ஆகியோரோடு தம்மையும் சேர்த்து நால்வர் கொண்ட அமைச்சரவை வாரியமாக அமைச்சரவையை மாற்றியமைப்பதற்கும் அவர் முடிவு செய்துள்ளார்.

அவரது முடிவுப்படி டெனீஸ்வரன் உட்பட பழைய நான்கு அமைச்சர்களும் 'அவுட்'. அவர்களுக்காக சர்வேஸ்வரன், அனந்தி, குணசீலன் ஆகிய மூவரும் வருவர். ஐந்தாவது இடம் உடனடியாக நிரப்பப்பட மாட்டாது. இது தொடர்பாக ஆளுநருக்கு முதல்வர் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். பக்கம் 18





## பூஜைக்காக ரணில் இந்தியாவுக்கு!

கொழும்பு, ஓக.22

பிரதமர் ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 25 ஆம் திகதி தனிப்பட்ட பயணமாக இந்தியா செல்லவுள்ளார். தென்னிந்தியாவில் கோயில் ஒன்றில் பூஜை ஒன்றை மேற்கொள்ளும் நோக்கில் அவர் இந்தியா செல்ல உள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

ரணில் விக்ரமசிங்கவுக்கு பக்கம் 18

## சு.க. தலைவர் தானே என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஓக.22

இன்னமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் தானேஎன முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல, நெலும் மாவத்தையில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பக்கம் 18

## பழைய 4 அமைச்சர்களையுமே நியமிக்கக் கோரி பிரேரணை

### சு.க. உறுப்பினர் அகிலதாஸ் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கு மாகாண சபையின் பழைய நான்கு அமைச்சர்களையுமே மீண்டும் அமைச்சர் பதவிகளுக்கும் நியமிக்க வேண்டும் என முதலமைச்சரைக் கோரும் பிரேரணை ஒன்றுக்கான முன்னறிவித்தலைக் கொடுத்திருக்கின்றார் சபையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான அகிலதாஸ் சிவக்கொழுந்து. பக்கம் 18

## டெனீஸை நீக்கி விந்தனை நியமியுங்கள் முதல்வருக்கு ரெலோ எழுத்தில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22

டெனீஸ்வரனை அமைச்சரவையில் இருந்து நீக்கும் நடவடிக்கையை விரைவாக முன் னெடுக்கும்படியும், அவருக்குப் பதிலாக எமது கட்சியினால் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டவாறு விந்தன் கனகரத்தினத்தை நியமிக்குமாறும் ரெலோ கட்சி வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனை நேற்று எழுத்தில் கோரியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா நேற்று முதல்வருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். பக்கம் 18

## அமைச்சர் நியமனப் பிரேரணை சபை நிகழ்ச்சி நிரலில் வராது!

### அவைத் தலைவரின் முடிவு அதுவாம்

யாழ்ப்பாணம்,ஓக.22

முன்னைய நான்கு அமைச்சர்களுக்கும் அப்பதவிகளை மீள வழங்க வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண சபையின் சு.க.உறுப்பினர் சி.அகிலதாஸ் சமர்ப்பித்துள்ள பிரேரணையை அவைத் பக்கம் 18

## ரெலோவில் உறுப்பினராக இல்லாத என்னை இடைநிறுத்துவது எப்படி என டெனீஸ் கேள்வி



மன்னார், ஓக. 22

"ரெலோவில் நான் அடிப்படை உறுப்பினனே அல்லன். உறுப்பினன் அல்லாத என்னை அக்கட்சி எங்ஙனம் ஆறுமாதகாலத்துக்கு இடை நிறுத்த முடியும்? இது நகைப்புக்கிடமான தீர்மானம்."

– இப்படிக் கூறியிருக்கின்றார் வடமாகாண சபையின் போக்குவரத்து, கடற்றொழில் அமைச்சர் பா. டெனீஸ்வரன்.

அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி, ரெலோ முடிவு செய்திருப்பதாக நேற்று வெளிவந்த செய்தியை ஒட்டி அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:–

ரெலோ கட்சியினர் யாப்பு விதிகளுக்கு அமைவாக சில நடவடிக்கைகளை பக்கம் 18

## மீண்டும் ஐ.தே.கட்சிக்கு வர திஸ்ஸ அத்தநாயக்க விருப்பம்

கொழும்பு, ஓக.22

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வருமாறு அதன் பொதுச் செயலாளர் தன்னை அழைத்துள்ளார் எனவும், அதற்குப் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித் துள்ளனர் எனவும் முன்னாள் ஐ.தே.கட்சிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி பக்கம் 18

## ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து வற்புறுத்து

கொழும்பு, ஓக.22

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கை தொடர்பாக நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் 'டுவிட்றர்' பக்கத்தில் தகவல் பதிவிடப்பட்டுள்ளது.

நீதியைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களை முன்னிறுத்தியே அந்த நீதி கிடைக்க வேண்டும். அதன் மூலம் காயங் பக்கம் 18

## மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு நேற்றுப் பிடியாணை!

### அதே நீதிமன்றம் விடுத்தது

யாழ்ப்பாணம், ஓக. 22

மல்லாகம் நீதிவான் நீதிமன்ற பதிவாளருக்கு எதிராக அதே நீதிமன்றினால் நேற்று பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


பெண் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக தெல்லிப் பக்கம் 18

## விஜயதாஸ ராஜபக்ஷவை நீக்குவதா? ஜனாதிபதியுடன் பிரதமர் பேசுவாராம்!

கொழும்பு, ஓக.22

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பில் ஜனாதிபதியுடன் நேற்று இரவு கலந்துரையாடி ஒரு முடிவைப் பிரதமர் எடுக்கவிருந்தார் எனக் பக்கம் 18

அளப்பு அருணாசலம்



அரசியல்வாதிகளின் பாவங்களுக்கு பரிகாரம் உண்டா?

## புலோலியில் நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரை இடும் பணி

புலோலி, ஓக. 22

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலகத்தில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடும் பணி எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் காலை 9 மணி முதல் பி.ப 3 மணி வரை நடைபெறவுள்ளது என சபைச் செயலாளர் சி.சிறிபாஸ்கரன் தெரிவித்தார்.

பிரதேச எல்லைக்குள் உள்ள ப.நோ.கூ.சங்கங்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் குறித்த தமது கருவிகளைப் பரிசோதித்து முத்திரை இட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ)

## சாவகச்சேரி நகரப்பகுதி காலபோக செய்கை; இன்று வயல்கள் பதிவு

சாவகச்சேரி, ஓக. 22

சாவகச்சேரி நகர எல்லைக் குட்பட்ட பிரதேசத்தில் காலபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பதிவு செய்யப்படவுள்ளன.

பதிவுகள் அந்தந்த வயல்களைப் பார்வையிட்டு அளந்த பின்னர் மேற்கொள்ளப்படும் எனவே வயல்களின் உரிமையாளர்கள் அல்லது குத்தகையாளர்கள் உறுதி மற்றும் குத்தகைப்பத்திரம் போன்ற ஆவணங்களுடன் தத்தமது வயல்களை அண்டிய பகுதியில் நிற்குமாறு சாவகச்சேரி நகர கமக்கார அமைப்பின் தலைவர் உ.பரமநாதன் அறிவித்துள்ளார். (இ)

## தெல்லிப்பழை துர்க்காதேவியின் மகோற்சவம் நாளை ஆரம்பம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தின் கொடியேற்றம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற உள்ளது.

திருமுறைத் திருவிழா இம்மாதம் 25 ஆம் திகதி மாலை 6 மணிக்கும், திருமஞ்சத் திருவிழா 28 ஆம் திகதி மாலை 6 மணிக்கும், வேட்டைத் திருவிழா 31 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கும் கைலாச வாகன வீதிவலம் அதே நாளில் மாலை 6 மணிக்கும்-

சப்பறத் திருவிழா முதலாம் திகதி வெள்ளிக்கிழமையும், தேர்த்திருவிழா மறுநாள் 2 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் அதே நாளில் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (அ)

## கிளிநொச்சியில் புலமைசார் குறைபாடுடையவர்களுக்கான செயலமர்வு!



கிளிநொச்சி, ஓக. 22

புலமைசார் குறைபாடுடையவர்கள் மற்றும் அவர்களை பராமரிக்கின்றவர்கள் ஆகியோருக்கான செயலமர்வு கிளிநொச்சியில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் செயலமர்வு கிளிநொச்சி சமூக சேவைகள் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் புலமைசார் குறை பாடுடையவர்கள் நலன்புரி சங்கத்தினரால் நடத்தப்பட்டுள்ளது.

இந்த செயலமர்வில் மாவட்டத்தில் உள்ள பல புலமைசார் குறைபாடுடையவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் பராமரிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் வே. தபேந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட வைத்திய சாலையின் உளநல மருத்துவர் ஜெகரூபன், புலமைசார் குறைபாடுடையவர்கள் நலன்புரி சங்கத்தின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சந்நிதி முருகனை வழிபட வருவோர்; கலாசார உடை அணிந்து வாருங்கள்!

### பருத்தித்துறை பிரதேச செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேறி நடைபெறவுள்ளது.

சந்நிதி முருகனை வழிபடவரும் பக்த அடியார்கள் கலாசார உடையுடன் ஒழுக்க சீலர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று மகோற்சவ ஏற்பாட்டுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளைசிறி ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

அந்த ஊடகக் குறிப்பில் உள்ள முக்கிய சில அறிவுறுத்தல்கள் வருமாறு:-

* மகோற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்து வருகை தரும் திருடர்களின் நடமாட்டம் ஏற்படவாய்ப்புள்ளதால் பக்த அடியார்கள் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களை அணிவது தவிர்த்தல் வேண்டும்.
* ஆலய சூழலில் உள்ள மடங்கள், கடைகள், விற்பனை வாகனங்களின் ஒலிபெருக்கி பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.
* பொருள்களின் விலைகள் குறித்தொதுக்கப்பட்ட விலைகளுக்கு அமைவாகவே விற்கப்படல் வேண்டும். மீறுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
* வலிகாமப் பகுதியில் இருந்து அச்சுவேலிப் பாதை ஊடாக வரும் பக்த அடியார்களுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைக்கான தரிப்பிடம் தொண்டைமானாறு சந்திப் பகுதியில் அமைக்கப்படும்.
* இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் போக்குவரத்து பஸ்களுக்கான தரிப்பிடம் வழமையான இடத்தில் அமைக்கப்படும்.
* ஆற்றில் நீராடச் செல்லும் பக்த அடியார்கள் பாதுகாப்பு எல்லைக்குள் நீராடுதல் வேண்டும்.
* பொலித்தீன் பாவனை ஆலயச் சூழலில் தடைசெய்யப்பட்டுள்ளது.
* பாதுகாப்பை உறுதி செய்ய தன்னியங்கி (சி.சி.ரிவி.) கமராக்கள் செயற்பாட்டில் இருக்கும்.
* ஆலயத் தேரோடும் வீதிகளில் சகல விதமான வியாபாரங்களும் நடைபாதை வியாபாரங்களும் களியாட்டங்களும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. (இ)

## நல்லாட்சிக்குள் சுதந்திரக் கட்சியை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை!

கொழும்பு ஓக. 22

நல்லாட்சி அரசின் எஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குள் சுதந்திரக் கட்சியை வலுப் படுத்தும் வகையிலான யோசனை ஒன்றை முன்வைக்க கட்சியின் மூத்த அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் கடந்து போன இரண்டு வருட காலப் பகுதிக்குள் அரசின் பங்காளிக் கட்சியான சுதந்திரக் கட்சிக்கு சார்பாக எந்தவொரு செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படவில்லை என்று கட்சியின் மூத்த அமைச்சர்கள் அதிருப்தியுற்றுள்ளனர்.

எனவே, அரசின் எஞ்சியுள்ள பதவிக் காலத்தில் கட்சியை வலுப்படுத்தக் கூடிய வகையில் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் யோசனையொன்றை முன்வைக்கத் தீர்மானித்துள்ளனர்.

தற்போதைக்கு வரைபாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த யோசனைகள் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளன.

தமது யோசனைகள் குறித்து ஜனாதிபதி அல்லது அரசின் முக்கிய பிரமுகர்கள் உரிய கவனம் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடும் எதிர் நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவும் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பதிவான குற்றங்களுக்கு தீர்வு காண்பது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு!

கொழும்பு, ஓக. 22

பதிவாகியுள்ள குற்றங்கள் மற்றும் முறைப்பாடுகளில் 75 சதவீதமானவற்றை இந்த ஆண்டுக்குள் தீர்க்க வேண்டும் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில், பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறை விடுதியொன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப் படுத்துவது தனது நேற்றைய, இன்றைய மற்றும் நாளைய கடமை என்றும் அவர் கூறியுள்ளார்.

இரண்டாவதாக குற்றங்களைத் தடுக்கவும், அவற்றைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பதிவு செய்யப்பட்டுள்ள குற்றங்களில் இந்த ஆண்டுக்குள் 75 வீதமானவற்றுக்குத் தீர்வு காணவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றுக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் பங்களிப்பு வழங்க வேண்டும் என பொலிஸ்மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆலய உற்சவங்கள்

வேலணைமேற்குசிற்பனை முருகன் ஆலய மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

★★★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் 13 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ)

★★★

பருத்தித்துறை தம்பசிட்டி மாயக்கை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 5 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 6 ஆம் திகதி கொடியிறக்கத்துடன் காலை 6 மணிக்கு சமுத்திர தீர்த்தம் இடம்பெற்று திருவிழா நிறைவுறும். கோயில் முதன்மை வேதாகம பூஷணம் சிவசிறி சிதம்பர மகேந்திரக் குருக்கள் திருவிழாவின் முதன்மை குருவாக இருந்து திருவிழாக் களை நடத்தி வைப்பார். (இ)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று...



இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: இளங்கலைஞர் மன்ற மாணவர்கள், வயலின்: எஸ். நிரஞ்ஜனா, மிருதங்கம்: ஞா. வசந்.

தொடர்ந்து உடுவில் நாட்டிய கலாக்ஷேத்திரா தயாரித்து வழங்கும் ''ஓம் சரவண பவ'' நாட்டிய நிகழ்வும் இடம் பெறவுள்ளது. இதில்-

நட்டுவாங்கம்: அனுசாந்தி சுகிர்தராஜ், பாட்டு: அ.அமிர்தலோஜனன், வயலின்: அ.ஜெயராமன், மிருதங்கம்: நா.சிவசுந்தரசர்மா, கீபோட்: ந.செல்வச்சந்திரன், இயக்குநர்: கலாநிதி.கிருசாந்தி - ரவீந்திரா, துணை இயக்குநர்: துஷ்யந்தி - சுகுணன். (இ)

புதிய அரசமைப்புக்கான

# இடைக்கால அறிக்கை சபைக்கு அடுத்தமாதம் முதல் வாரத்தில்!

## நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஓக. 22

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை அடுத்த மாதம் – செப்ரெம்பர் – முதல் வாரத்தில் அரசமைப்புப் பேரவையாகச் செயற்படும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

நேற்று நடைபெற்ற நல்லாட்சி அரசின் அங்கத்துவக் கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் பங்கு பற்றிய கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்றிரவு 9 மணி முதல் 11.30 வரை இந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் –

ஐ.தே.கட்சி சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மலிக் சமரவிக்கிரம, ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர ஆகியோரும் –

சுதந்திரக் கட்சி சார்பில் நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜயந்த, அனுர பிரிய தர்ஷன யாப்பா, மஹிந்த அமர வீர, டிலான் பெரேரா ஆகியோரும் –

அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சம்பிக்க ரணவக்க, மனோகணேசன், திகாம்பரம், ரவூப் ஹக்கீம் ஆகியோரும் – கலந்து கொண்டனர்.

அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையை வெளியிடுவதற்கு அதில் சு.கவின் பின் இணைப்பாகச் சேர்த்துக் கொள்ளும் விடயத்தைத் தராமல் சு.க. இழுத்தடிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனை அடுத்து வியாழக் கிழமைக்கு முன்னர் அதனை வழங்குவதாக சு.க. தலைவர்களினால் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது.

அப்படி வழங்கப்பட்டால் அடுத்த வெள்ளிக்கிழமை வழிகாட்டல் குழுவின் கூட்டத்தைக் கூட்டி, இடைக்கால அறிக்கையை இறுதி செய்து, அதனை செப்டெம்பர் முதல் வாரத்தில் அரசமைப்புப் பேரவையான நாடாளுமன்றைக் கூட்டி அங்கு சமர்ப்பிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதில் உள்ள தேக்க நிலை குறித்து ஆராயப்பட்டு அதனைக் களைந்து அந்த நடவடிக்கையை விரைவுபடுத்துவது என்றும் –

புதிய அரசமைப்பின் தேவை, நோக்கம், அதில் இடம்பெறும் விடயங்களை நல்லாட்சி அரசின் சகல தரப்பும் இணைந்து மக்களிடம் எடுத்துச் சென்று, அதற்கு ஆதரவாக மக்கள் எழுச்சியைத் தோற்றுவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தற்போதைய அரசமைப்புக்கான 20ஆவது திருத்தம், அது கொண்டுவருவதற்கான நோக்கம் ஆகியன குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விகிதசார முறைமை மற்றும் தேர்தல் தொகுதி முறைமை ஆகியன கலந்த பொறிமுறையின் கீழ் நடத்துவதற்காகவே இது கொண்டுவரப்படுவதாக தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் –

இதன் நோக்கம் மாகாண சபைத் தேர்தல்களை தள்ளிப்போடுவது அல்ல என்றும் –

இந்தத் தேர்தல் பொறிமுறைக் கமைய மாகாணசபைத் தேர்தல் சட்டங்களை மாற்றியமைப்பதற்கும், மாகாணங்களின் தொகுதிகளை வரையறைசெய்து எல்லைகளை நிர்ணயிர்ப்பதற்குமாகத் தேவையானால் ஒருவருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு தற்போது கலாவதியாகும் சபைகளின் தேர்தல்களை தள்ளிப்போடலாம் என்றும் –

நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த அரசமைப்பு திருத்தம் தொடர்பான சட்டமூலம் உயர்நீதிமன்றின் பரிசீலனைக்கு போக முன்னர் மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட மூலம் வெளிவந்திருக்க வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நேற்றிரவு கூட்டத்தின் பின்னர் இன்று அதிகாலை வரை பிரதமர் ரணில் தலைமையிலான ஐ.தே. கட்சியின் ஒரு குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுடன் பேச்சு நடத்திக்கொண்டிருந்தது. அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தொடர்பான விடயம் குறித்து ஒரு தீர்மானம் எடுப்பது பற்றியே அக்குழு ஜனாதிபதியுடன் பேசியதாக அறிய வந்தது. (உ)

# ஜனாதிபதி - சம்பந்தன் இன்று மாலை சந்திப்பு

கொழும்பு, ஓக. 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இன்று மாலை 4.30 மணிக்கு நாடாளுமன்றவளாகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசுவார்.

கேப்பாபிலவு காணி விவகாரம் உட்பட தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து இந்தப் பேச்சுக்களில் ஆராயப்படும்.

இந்த விடயங்களை ஆராய்வதற்காக இந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதியுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் படைகளின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றுவர்.

கூட்டமைப்பு தரப்பில் சம்பந்தனோடு, எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கலந்து கொள்வார்.

மக்களின் காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம் உட்பட பல விடயங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்றிரவு ஜனாதிபதியின் இல்லத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டம் முடிவுற்ற பின்னர் சம்பந்தனும், ஜனாதிபதியுடன் சொற்ப நேரம் உரையாடினர். அப்போதே இன்றைய கூட்டத்துக்கான நேரம் ஒதுக்கப்பட்டது.

எல்லாப் பிரச்சினையையும் இன்றைய கூட்டத்தில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என ஜனாதிபதி சம்பந்தன் மற்றும் சுமந்திரனிடம் உறுதி கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### 4 பேர்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்கனவே கல்வி அமைச் சராக சர்வேஸ்வரன் செயற்படுகின்றார். அவக்குரிய அமைச்சுப் பொறுப்பில் எந்த மாற்றமும் இல்லை.

எஞ்சிய அமைச்சுக்கள் அனைத்தையும் அனந்தி, குணசீலன் மற்றும் முதலமைச்சராகிய தாம் என மூவருக்கும் ஒதுக்கியிருக்கின்றமையை இந்த மின்னஞ்சலில் முதல்வர் கோடிகாட்டியிருக்கிறார் என நம்பகரமாகத் தெரிய வந்தது.

அதன்படி, இந்த மூவரோடு சர்வேஸ்வரனும் சேர்ந்த அமைச்சர் வாரியம் ஆக நான்கு அமைச்சர்களை மட்டுமே கொண்டதாக இருக்கும் எனத் தெரிகின்றது.

எல்லா அமைச்சுகளும் துறைகளும் இந்த நால்வருக்குள்ளும் இப்போதைக்குப் பங்கு போடப்பட, ஐந்தாவது அமைச்சர் இல்லாத நிலைமை வரும். அது தற்காலிக ஏற்பாடா அல்லது நிரந்தர ஏற்பாடா என்பது தெரியவில்லை.

எனினும், இந்த நான்கு அமைச்சர்களிடமும் சகல அமைச்சுகளும், துறைகளும் ஒதுக்கப்பட்டு, அதற்கேற்ப அமைச்சரவை மாற்றத்துக்கான பதவியேற்பு நடைபெற்றால் தற்போதைய போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் இயல்பாகவே தமது அமைச்சர் பதவியை இழந்துவிடுவார் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

தற்போது கல்வி அமைச்சராகப் பதவி வகிக்கும் சர்வேஸ்வரனின் அமைச்சுக்கள், துறைகளில் மாற்றம் இல்லாததால் அமைச்சரவை மாற்றத்தின் போது அவர் புதிதாக சத்தியப் பிரமாணம் செய்ய மாட்டார் என்றும் கூறப்பட்டது.

முதல்வர் உட்பட மற்றைய மூவரிடமும் பதிய பொறுப்புகள் வருவதால் அந்தந்த அமைச்சுக்களைப் பொறுப்பேற்கும் விதத்தில் அவர்கள் மூவரும் பதவியேற்பும் சத்தியப்பிரமா ணமும் செய்ய வேண்டியிருக்கும்.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நாளையே யாழ்ப்பாணம் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னரே அமைச்சரவை மாற்றத்துக்கான சத்தியப்பிரமாணம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், முன்னைய சுகாதார அமைச்சரின் இராஜினாமாவைத் தாம் ஏற்று அங்கீகரித்து பரிந்துரைத்துள்ளமை –

தற்போதைய அமைச்சரவை மாற்றம் தொடர்பான தமது தீர்மானங்கள் –

போன்றவற்றை இன்னும் முதல்வர் அலுவலகம் எழுத்தில் ஆளுநர் அலுவலகத்துக்கு அனுப்பவில்லை எனக் கூறப்படுகின்றது. இது விடயங்கில் மின்னஞ்சல் செய்திகளை ஆளுநர் அலுவலகம் உத்தியோகபூர்வ கடிதமாக ஏற்குமா என்பதில் சிக்கல் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத் துக்கான துறைகள், ஒதுக்கீடு கள் எல்லாம் உரிய பரிந்துரைகளோடு அனுப்பப்பட்டு விட்ட நிலையில் அமைச்சுக்கள், துறைகளைத் தலைகீழாக மாற்றுவது நிர்வாக ரீதியில் பல நெருக்கடிகளைக் கொண்டு வரும் எனவும் சுட்டிக்காட்டப்படு கின்றது.

ரெலோ பரிந்துரைத்த விந்தனுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. அக்கட்சி பரிந்துரைக்காத மருத்துவர் குணசீலனுக்கு அது வழங்கப்படுகின்றது.

புளொட் உறுப்பினர் ஒருவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. அது இப்போதைக்கு வழங்கப்படுமா என்பது தெரியவில்லை.

விந்தன், புளொட் பிரதிநிதி (பெரும்பாலும் கே.சிவநேசன்) ஆகிய இருவரின் பெயர்களும் எதிர்பார்ப்புடன் வெளியில் நிற்க, ஐந்தாவது அமைச்சுப் பதவியை நிரப்பாமல் முதல்வர் காலத்தை இழுத்தடிக்கக்கூடும் என சில வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

எனினும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி உறுப்பினர் கமலேஸ்வரனுக்கு அமைச்சர் பதவி ஒன்றை வழங்கலாம் என்ற நம்பிக்கையில் அந்த அமைச்சுக்கான இடத்தை முதல்வர் வெற்றிடமாக வைத்திருக்கின்றார் என்றும் ஒரு செய்தி தெரிய வந்தது. (உ)

### ரெலோவில்....

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடயம், அந்தக் காரணங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று தாங்கள் நினைத்தால் அதனை செய்வதற்கும் தயாராகவே உள்ளேன்.

மேலும் நான் ஓர் அடிப்படை உறுப்புரிமை பெற்ற உறுப்பினராக இருப்பின் தங்களுடைய கட்சியின் விதிகள் சரியாக இருக்குமெனில் மூன்று கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக வராமல் இருக்கும்போதே அத்தகைய உறுப்பினர் தனது அடிப்படை உறுப்புரிமையினை இழக்க நேரிடும். சட்ட மற்றும் யாப்பு விதிகளில் இது பொதுவாக காணப்படும் ஓர் ஏற்பாடாகும், அவ்வாறெனில் தொடர்ச்சியாக 20 கூட்டங்களுக்கு வராமல் இருந்த ஓர் உறுப்பினரைத் தாங்கள் ஏன், எதற்காக கட்சியிலிருந்து நீக்காமல் விட்டீர்கள் என்ற கேள்வியையும் பகிரங்கமாகவே தங்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

கட்சியானது முதலமைச்சர் அவர்களோடு சேர்ந்து சூட்சுமமாக எனது அமைச்சுப் பொறுப்பைப் பறித்துப் பழி தீர்க்க வேண்டுமென்ற நோக்கில் செயற்படுவதை என்னால் உணரமுடிகின்றது. எனக்குத் தெரியாமல் இரகசியமாக என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதாமல் என்னோடு நேரடியாகக் கதைத்திருந்தால் எவ்வித தயக்கமுமின்றி அமைச்சு பதவியைத் தங்களுக்கு விட்டுத்தந்திருப்பேன். ஆனால் தற்பொழுது தாங்களும் கௌரவ முதலமைச்சர் அவர்களும் புறமுதுகில் குத்தி என்னைப் பழி வேண்ட வேண்டுமென்று அல்லது அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வீர்களாயின் தகுந்த நேரத்தில் எமது மக்கள் தங்களுக்கு தகுந்தபாடம் புகட்டுவார்கள் என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

மேலும் தாங்கள் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டவாறு அதற்கு தக்க பதிலளிக்க வேண்டுமென்று கடந்த 12ஆம் திகதி நேரடியாகவே தங்களின் கூட்டத் திற்கு வந்து தகுந்த பதிலை தங்கள் எல்லோர் முன்னிலையிலும் தெரிவித்திருந்தேன்.


ஆனால் கட்சியின் யாப்பு விதிகளைக் கேட்டு இரண்டு மாதங்கள் ஆகியும் ஏன் எதற்காக எனக்கு அதனைத் தரவில்லை என்ற கேள்வியையும் தற்பொழுது வெளிப்படையாகவே கேட்க விரும்புகின்றேன். அத்தோடு தங்களது கட்சியில் நான் ஓர் அடிப்படை உறுப்புரிமை இல்லாதவன் என்ற வகையிலா அதனை எனக்கு அனுப்பி வைக்காமல் இருக்கின்றீர்கள் எனவும் கேள்வி எழுப்பு கிறேன்.

கட்சியானது ஜனநாயக ரீதியாக வளர்ந்து வருகின்றபோது வெளிப்படைத் தன்மையோடும், நேர்மையுடனும் செயற்பட்டாலாலேயே அக்கட்சியானது மக்களின் மனங்களில் இடம்பிடிக்க முடியும். இது தவிர்த்து சிறுபிள்ளைத்தனமாகக் கட்சி நடந்து கொள்ளுமாயின் அக்கட்சியின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடுவார்கள் என்பதையும் மறந்து விடவேண்டாம்.

ஆகவே எது, எவ்வாறு இருப்பினும் சட்ட மற்றும் யாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக முறைப்படி என்னைக் கட்சியில் ஓர் உறுப்பினராக சேர்த்துவிட்டு, அதன்பின்னர் தங்களது யாப்பில் பின்னோக்கியாளும் சட்ட ஏற்பாடுகள் காணப்படுமிடத்து, ஆறு மாதங்கள் தற்காலிகமாக இடைநிறுத்துவதை விட நிரந்தரமாகவே தங்கள் கட்சியில் இருந்து நிறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு செய்தால் அதனை முழு மனதோடும் மகிழ்ச்சியோடும் வரவேற்பேன்.

எவரும் சட்ட விதிமுறைகளுக்கு முரணாக எதையும் செய்ய முடியாது என்பதோடு, யாவரும் சட்டத்துக்கு முன் சமனானவர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன். – என்றுள்ளது.




பூங்கா வனத்தன்று பூசிப்போம் நல்லூரில்
ஆங்கழகுக் காய்வளரும் பூமரங்கள் - தீங்கான
சூழலை மாசகற்றுஞ் சூக்குமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி.

- வேலணையூர் (அமரர்) சி.இராசரத்தினம்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முடிவுக்கான காலம் இது

தற்போதைய நல்லாட்சி அரசின் பதவிக்காலம் கடந்த வாரத்தில் இரண்டு வருடங்களைக் கடந்திருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த இரண்டு வருடங்களில் இந்த அரசு நல்லாட்சி அரசாங்கமாகச் செயற்பட்டதா என்ற கேள்வி எழுவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலகுவில் நிராகரிக்க முடியாத - நியாயமான - கேள்வி இது.

நீண்டதொரு போராட்டத்தை நடத்தி, பல லட்சக்கணக்கான உயிர்களையும், பெருமளவு சொத்து, உடைமைகளையும் இழந்து - பறி கொடுத்து - போராடிய தமிழினம் இன்று ஒரு நியாயத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

தாமும் சேர்ந்துகொண்டு வந்த இந்த நல்லாட்சியின் ஊடாகத் தமக்கு நீதி, நியாயம் கிட்டும் என எதிர்பார்த்த தமிழர்களுக்கு இந்த இரண்டு வருட ஆட்சியின் முடிவில் மனவிரக்தியும், ஆதங்கமும், கோபமும்தான் மிஞ்சியிருக்கின்றன எனச் சுட்டிக் காட்டியிருக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மீள்குடியேற்றம் நடக்கவில்லை; இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்கள் விடுவிக்கப்படவில்லை; காணாமலாக்கப்பட்ட உறவுகள் விடயத்தைத் தீர்ப்பதில் முன்னேற்றம் ஏதுமில்லை; அரசியல் கைதிகள் விடுதலையும் கானல் நீராக இழுபடுகின்றது; புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துக்குள் விடுவிக்கப்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டோரும் மீளக் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் தண்டிக்கப்படும் அவலம் தொடர்ந்து பரவுகிறது.

நீண்ட கால இனப்பிரச்சினைக்குரிய தீர்வை உள்ளடக்கிய தான புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளும் தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளின் மேலாண்மைப் போக்கினால் முடங்கிக் கிடக்கின்றன. அரசியல் தீர்வு அண்மைக் காலத்தில் சாத்தியமாகும் என்ற நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகச் சிதறிக் கொண்டிருக்கின்றது.

நில மீட்புக்கும், காணாமற் போன தமது உறவுகளைக் கண்டறியவும் மக்கள் நடத்தும் போராட்டங்கள் ஐந்து, ஆறு மாதங்களையும் தாண்டிப் பயனின்றித் தொடர்கின்றன. அப்படிப் போராடும் மக்களின் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காக - எருமை மாட்டில் மழை பெய்த விவகாரம் போல - அவமாகவே தோன்றுகின்றன.

இந்தச் சூழலில் இந்த நல்லாட்சி அரசின் மீது சம்பந்தன் போன்ற தமிழ்த் தலைவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் தகர்ந்து வருகின்றது என்று சுட்டும் சுரேஷ் பிறேமச்சந்திரன், இந்த அரசு தங்களைக் கைவிட்டு விட்டது என்று ஐக்கிய நாடுகள் சபைக்குக் கடிதம் எழுத வேண்டிய நிலைமைக்கு சம்பந்தன் தள்ளப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கின்றார்.

சுரேஷ் பிறேமச்சந்திரன் குறிப்பிட்ட தகவல்கள் தவறானவையல்ல. இந்த நல்லாட்சி அரசின் மீது நம்பிக்கை வைத்த சம்பந்தனும், கடைசியில் ஏமாற்றப்பட்டு விடுவாரோ என்று சிந்திக்கத்தக்கதான அரசியல் நிகழ்வுகளே இங்கு கட்டவிழ்கின்றன.

இந்தப் பின்புலத்தில்தான், நேற்றுப் பின்னிரவில் நடைபெறவிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஆளும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் கலந்து கொள்ள இருந்தனர்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் தொடர்பிலான விசேட கூட்டம் இது என்பதால், இவ்விடயம் தொடர்பில் வேண்டும் என்றே ஏற்படுத்தப்பட்டுள்ள வீண் தாமதம் மற்றும் பின்னடைவு குறித்து கூட்டமைப்புக் குழுவினர் தெளிவாகவும் உறுதியாகவும் உரையாடியிருப்பார்கள் என்று நம்பலாம்.

இந்த விடயத்தில் நல்லாட்சி அரசு என்ன சொல்லப் போகின்றது என்பதை வெளிப்படையாகவும், திட்டவட்டமாகவும் கேட்டறிந்து, அதனடிப்படையில் ஒரு முடிவுக்கு வரவேண்டிய சூழல் - பொறுப்பு - கட்டாயம் - இன்று தமிழ்க் கூட்டமைப்புக்கு வந்துள்ளது.

நேற்றைய கூட்டத்தில் ஒரு தீர்க்கமான - நம்பிக்கையான - தெளிவான - உறுதியான - பதில் கூட்டமைப்பின் தலைமைக்குக் கிடைக்காவிட்டால், கூட்டமைப்பின் தலைமை மாற்றுவழி குறித்து சிந்திக்க வேண்டிய வேளையும் தருணமும் வந்து விட்டது என்பதே அர்த்தமாகும்.

அசைக்க முடியாத வலிமையான நிலையில் ஆட்சிப் பீடத்தில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ குழுமத்தை அடியோடு பெயர்த்து வீட்டுக்கு அனுப்பும் கைங்கரியத்தில் கணிசமான பங்கு தமிழர்களுக்கு - அவர்களுக்குத் தலைமை வகித்த சம்பந்தனுக்கு - உண்டு.

அத்தகைய நிலையில், நல்லாட்சி அரசினால் தமிழர்களுக்கு உண்மையான நல்லாட்சியைத் தரமுடியாவிட்டால் அந்த இடத்துக்கு உரிமையை - நியாயத்தை - வழங்கக் கூடிய வலுவுடைய தரப்பைக் கொண்டு வருவது குறித்து கூட்டமைப்பு சிந்திப்பது தவிர்க்க முடியாததாகும்.

அதற்கான காலம் கனிந்து வந்திருப்பதாகவே தோற்றுகின்றது.

# சிறுபான்மை இனங்களை மோதச் செய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்படுகிறது - ஸ்ரீநேசன் எம்.பி.



கொழும்பு, ஓக. 22

யுத்தம் முடிவடைந்த பின்னரும் சிறுபான்மைச் சமூகங்களை முட்டி மோதச் செய்வதற்கான சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அரசியலில் முன்னெடுக்கப்பட வேண்டிய தூரநோக்குச் சிந்தனைகள் தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுபான்மைச் சமூகங்களான தமிழரும், முஸ்லிம்களும் ஒற்றுமையாகச் செயற்பட்டு உரிமைகளைப் பெறுவதைத் தடுப்பதற்காக பல சூழ்ச்சி நிகழ்ச்சி நிரல்கள் கையாளப்பட்டு வருவதை தூரநோக்குச் சிந்தனையாளர்கள் உற்றுக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

கடந்த கால யுத்தத்தால் சிறுபான்மை இனங்கள் திட்டமிட்டு வேண்டுமென்று சீரழிக்கப்பட்டன. இப்பொழுது யுத்தம் முடிவடைந்த பின்னரும் இவ்விரு சிறுபான்மைச் சமூகங்களையும் முட்டி மோதவிட்டு சீரழித்து சின்னாபின்னமாக்குவதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இப்பொழுது திடீரென நமக்காகப் பரிந்து பேச எத்தனிக்கும் நபர்களின் கடந்த கால நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள் ஏன் இவ்வளவு ஆர்வமாகவுள்ளார்கள் என்பது பற்றியும் நாம் கவனமாகச் சிந்திக்க வேண்டும்.

இலங்கைச் சிறுபான்மைச் சமூகங்கள், இலங்கையின் வரலாற்றில் எத்தனையோ ஈடு செய்ய முடியாத இழப்புக்களைச் சந்தித்தவர்கள் என்பதை மனத்தில் இருத்தி எதிர்கால நடவடிக்கைகளை இணக்கப்பாட்டோடு முன்னெடுக்க வேண்டும்.

ஆயுதப்போராட்டச் சக்தி மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் பலமான ஜனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. அந்த சக்தியை நேரடியாகவும், மறைமுகமாகவும் பல வீனப்படுத்து வதற்காக பல கெடுபிடிகளும் நெருக்கடிகளும் தரப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66 ஆவது மாநாடு: அனைவருக்கும் திறந்த அழைப்பு என்கிறார் எஸ்.பி.!



கொழும்பு, ஓக. 22

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 66 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டுக்கு சுதந்திர கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கட்சியின் 66 வருடாந்த மாநாடு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி பொரளை கம்பல் பார்க் மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து கட்சியின் ஆலோசகரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து இன்னும் அதிகாரபூர்வமான அறிவிப்புகள் வெளியாகவில்லை.

மாநாட்டில் பங்கேற்பது குறித்து, ஒன்றிணைந்த எதிரணியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தமது முடிவை அறிவிக்கவில்லை.

இந்த நிலையில், மாநாட்டில் பங்கேற்குமாறு அனைவருக்கும் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்

# பிரதான கட்சிகள் அரசியல் கலாசாரத்தை அழித்து விட்டன என்கிறார் ரில்வின் சில்வா!




கொழும்பு, ஓக. 22

பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நாட்டின் அரசியல் கலாசாரத்தை அழித்து விட்டார்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்விதமான விஞ்ஞானபூர்வமான முறை அமைச்சு பதவிகள் பகிரப்படாத காரணத்தால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

பதுளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதி அமைச்சின் கீழ் வரவேண்டிய துறைகள், பிரதமரின் கீழ் உள்ள அமைச்சிடம் இருக்கின்றன. பாடசாலைக் கல்விக்கான அமைச்சு தனியாகவும், உயர்கல்வி அமைச்சு தனியாகவும் இருக்கின்றன.

பெருந்தெருக்கள் துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் உயர் கல்வி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## குளிர்பானங்களில் சேர்க்கப்படும் மேலதிக சீனிக்கு வரி!

கொழும்பு, ஓக. 22

குளிர்பானங்களில் சேர்க்கப்படும் மேலதிக சீனிக்கு வரி அறவிட தீர்மானித்துள்ளோம் என சுகாதார போசாக்கு மற்றும் சுதேசவைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பிற்கமைவாக 100 மில்லி லீற்றர் குளிர்பானத்திற்குச் சேர்க்க வேண்டிய அதிகூடிய சீனியின் அளவு 6 கிராம் ஆகும்.

அதற்கு மேலதிகமாக சேர்க்கப்படும் ஒவ்வொரு கிராம் சீனிக்கும் ஒரு ரூபாய் வரி அறவிட தீர்மானித்துள்ளோம் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (க)

## நாளை

23.08.2017
புதன்கிழமை
நட்சத்திரம்: பூரம் பி.ப 4.30 வரை
திதி: துதியை மு.இ 10.56 வரை
சுபநேரம்: 4.35 – 6.05 வரை
இராகுகாலம்: 12.05 – 1.35 வரை

# வறட்சிப் பாதிப்பு நிவாரணத்துக்காக 5 நாள் சிரமதானம் வலியுறுத்தல்!

## கிராம அலுவலர்கள் மீது மக்கள் அதிருப்தி

கிளிநொச்சி, ஓக. 22

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு அரசு நிவாரணம் வழங்கியுள்ளது.

அதனைப் பெறுவதற்கு 5 நாள்களுக்கு சிரமதானம் செய்ய வேண்டும் என கிராம அலுவலர்கள் வற்புறுத்துகின் றனர் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களும் வெகுவாக பாதிப்படைந்துள்ளன.

அந்த மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தக் கடுமையாக போராடி வருகின்றனர்.

இந்தநிலையில், அரசால் வழங்கப்பட்ட வறட்சி நிவாரணத்தைப் பெறுவதற்கு நாள் ஒன்றுக்கு 3 மணிநேரம் வீதம் 5 நாள்களுக்கு வேலை செய்தால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் எனக் கிராம அலுவலர் ஊடாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு கலந்து கொள்ளாதவர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாளாந்த கூலி வேலை செய்வோர், தனியார் துறைகளில் வேலை செய்வோர் எனப் பலரும் கடுமையாக பாதிப்படைந்துள்ளனர்.

மன்னராட்சிக் காலத்தைப் போன்று நிவாரணத்திற்காக மக்களை அரச அதிகாரிகள் வேலை வாங்குகின்றமை தொடர்பில் மக்கள் பலரும் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மேலும், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இந்த நிலை காணப்படுகிறது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. (க-100)

## வாக்காளர் இடாப்பு வரைவு நகல் வெளியானது!

கொழும்பு, ஓக. 22

2017 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் வரைவு நகல் தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வரைவு நகலை தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மேலும், இது தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவிப்பு விடுத்துள்ளது.

## அதிதீவிர பாதுகாப்பில் நீதிபதி இளஞ்செழியன்!



யாழ்ப்பாணம், ஓக. 22

இலங்கை நீதித்துறையில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனுக்கு விசேட அதிரடிப் படையினருடன் கூடிய விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடமை நேரத்தில் நீதிமன்றத்துக்கும், அவருடைய வாசஸ்தலத்திற்கும் இந்த விசேட பாதுகாப்பை அரசு வழங்கியுள்ளது.

நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, நீதிபதி இளஞ்செழியனுடன் உடனடியாகத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தச் சம்பவம் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்ததுடன், அவருடைய பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களிலும் கூடிய கவனம் செலுத்தியிருந்தார்.

அதேநேரம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், அத்துல் கெசாப் நீதிபதியுடன் தொடர்பு கொண்டு, நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார், அவருடைய பாதுகாப்புத் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தார்.

இதனையடுத்து, நீதிபதி இளஞ்செழியனுக்கு அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழி வழக்கு விசாரணைக்கான விசேட நீதிபதியாக இளஞ்செழியன் நியமிக்கப்பட்டிருந்த போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் அவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

அச்சமயம் அமெரிக்க தூதுவராக இருந்த ஏட்லி வில்ஸும் நீதிபதியின் பாதுகாப்புச் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தியிருந்தார்.

நீதிபதி இளஞ்செழியன் வவுனியாவில் கடமையாற்றிய போது, அவருக்கு சிக்மா மோட்டார்சைக்கிள் படையணி பாதுகாப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது அவருடைய பாதுகாப்புக்காக விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த எட்டுப் பேர் அடங்கிய குழுவினர், அவர் நீதிமன்றத்தில் கடமையில் இருக்கும் போது பாதுகாப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்டிருக் கின்றனர்.

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் ரொசான் பெர்னாண்டோவின் கட்டளையின்படி யாழ். பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் அவருடைய வாசஸ்தலத்துக்குப் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## வறட்சிப் பாதிப்பால் கிளிநொச்சி மக்கள்: அழிவு நிலையில் பயன்தரு மரங்கள்!



குடிதண்ணீர் பெறுவதிலும் சிரமம்

கிளிநொச்சி, ஓக. 22

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் தொடர் வறட்சி காரணமாக அங்குள்ள மக்கள் தமது தேவைக்கான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மலையாளபுரம், பொன்னகர், கோணாவில், யூனியன்குளம் உள்ளிட்ட பகுதிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இவ்வாறு குடிதண்ணீர்த்தட்டுப் பாடு நிலவிவரும் பகுதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவப்பிரிவு உள்ளிட்ட ஏனைய திணைக்களங்களின் ஊடாக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதும், ஏனைய தேவைகளுக்கான நீரைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கோணாவில், யூனியன்குளம் பகுதிகளில் நிலவுகின்ற கடுமையான வறட்சியினால் மீள்குடியேறிய மக்கள் நடுகை செய்துள்ள பெருமளவான தென்னை மரங்களும், ஏனைய மரங்களும் வறட்சியால் அழிவடைந்து வருகின்றன.

குறிப்பாக, 2010ஆம் ஆண்டு மீள்குடியேறிய மக்கள் திறந்த கிணறுகளை அமைத்து அவற்றின் மூலம் பயன்தரக் கூடிய தென்னை தோடை, மா, பலா போன்ற பயன் தரு மரங்களை நடுகை செய்து வந்தனர்.

தொடர் வறட்சியால் தற்போது இவை அழிவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் ஆலயச் சுற்றாடலில் தாராள பிளாஸ்ரிக் பாவனை!

### மக்கள் விசனம்



யாழ்ப்பாணம், ஓக. 22

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் பொலித்தீன் மற்றும் பிலாஸ்ரிக் பாவனைக்கு யாழ். மாநகர சபை முற்றாகத் தடை விதித்திருந்தது.

எனினும், முக்கிய திருவிழாவான தேர்த் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்ற போது நல்லூர் ஆலயச் சூழலில் பிளாஸ்ரிக் பாவனை தாராளமாகக் காணப்பட்டுள்ளது.

தேர் தெற்கு வீதியில் வருகை தந்த போது தேரை வடம் பிடித்து இழுத்த பக்தர்களுக்கு பிளாஸ்ரிக்கிலான தண்ணீர்ப் போத்தல்கள் நூற்றுக் கணக்கில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

தேர் இருப்பிடத்தைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து ஆலயத்தின் வடக்கு வீதியூடாக பிளாஸ்ரிக்கிலான பெருமளவு தண்ணீர்ப் போத்தல்கள் எடுத்துவரப்பட்டு அடியார்களுக்கும் வழங்கப்பட்டன.

நல்லூர் ஆலயச் சூழலில் கடந்த வருடம் போன்று இவ் வருடமும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனைகள் தடை அமுல்படுத்தப்படும். இந்த விடயத்தில் நாங்கள் மிகவும் கண்டிப்பாக இருப்போம் என ஆலயப் பெருவிழாவின் முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக ஆலயச் சூழலில் மஹோற்சவ காலத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வர்த்தக நிலையங்களிலும், தண்ணீர்ப் பந்தல்களிலும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை இடம்பெறவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஆலயச் சுற்றாடலில் தாராளமான பிளாஸ்ரிக் பாவனை இடம்பெற்றிருப்பது பலரதும் விசனத்துக்கு ஆளாகியுள்ளது. (க)

காலைக்கதிர்
Kalaikkathir



# மூன்று இனத்தவரின் முழு ஆதரவையும் பயன்படுத்தி ஐ.ம.சு. முன்னணி கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றும்!

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் எதிர்பார்ப்பு



மட்டக்களப்பு, ஒக. 22

மூன்றுஇனத்தவர்களினதும் ஆதரவை பயன்படுத்தி கிழக்கின் ஆட்சியை ஐ.ம.சு. முன்னணி கைப்பற்றும் என இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் சுட்டிக்காட்டியுள்ளார்.

காத்தான்குடியில், நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபை அதன் பதவிக் காலம் நிறைவடைந்ததும் கலைக்கப்படும். எந்தக் காரணம் கொண்டும் அதனைப் பிற்போட இடமளிப்பதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

எனவே, கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் வெகு விரைவில் நடைபெறும். அதற்கான தயார்படுத்தல்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

எமது கட்சிக்குள் இருவேறு அணிகள் செயற்பட்டாலும் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நாங்கள் ஒன்றிணைந்தே செயற்படுவோம். கிழக்கு மாகாணத்தில் நாங்கள் இணைந்து செயலாற்றினால் மாத்திரமே மீண்டும் கிழக்கின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்.

ஏற்கனவே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை இரண்டு முறைக் கைப்பற்றியிருந்தது. தற்போதும், அதிக ஆசனங்களைத் தம்வசம் வைத்திருந்தும் எதிர்க்கட்சியில் இருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூன்று இனத்தவர்களது ஆதரவையும் ஐ.ம.சு முன்னணியே பெற்றுள்ளது. இதனைபயன்படுத்திகிழக்கின் ஆட்சியை ஐ.ம.சு முன்னனி கைப்பற்றும்.

நாட்டில் நல்லாட்சி என்ற புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திற்காகச் செய்கின்ற பணிகளுக்கு கிழக்கு மாகாண மக்கள் பக்க பலமாக இருக்க வேண்டும்.

எனவே, கிழக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரத்தை ஜனாதிபதி தலைமையிலான ஐ.ம.சு முன்னணி கைப்பற்று மாயின் கிழக்கு மாகாணம் மேலும் அபிவிருத்தியடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# கூட்டரசை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்துவிடாது!



## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக. 22

அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து கூட்டரசை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்துவிடாது என நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நகர சபைக் கட்டடத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்திற்குப் பின்னர் அபிவிருத்தி என்ற விடயத்தில் இனங்கள் மத்தியிலே புரிந்துணர்வு இல்லை. அபிவிருத்திகளைப் பகிர்ந்துகொள்வதிலே இனங்களுக்கிடையில் இன்னமும் சந்தேகம் நிலவுகின்றது.

அரசியல் தலைமைகள் கூட்டரசு அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்து விடமாட்டாது. அது அடி மட்ட சமூக மக்களின் புரிந்துணர்விலிருந்து வர வேண்டும்.

அரச ஊழியர் நியமனங்களில், பதவி நிலைகளில், நிறைவேற்று அதிகாரங்களில் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

இப்படிப் பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியில்தான் ஒரு நெருக்கடியான ஆட்சியை எங்களுடைய கிழக்கு மாகாண முதலமைச்சர் சகல கட்சிகளும் சேர்ந்த ஒரு தேசிய அரசை கிழக்கு மாகாணத்திலே நடத்திக்கொண்டு வருகின்றார்.

தமிழ் மக்களுக்கு உரிய பங்கு அபிவிருத்திக்குப் போக வேண்டும் என்பதற்காக எனது அமைச்சினூடாக 20கோடி ரூபாவை மட்டக்களப்பு நகரிலே உட்கட்டமைப்பு வசதிகளுக்காகச் செலவு செய்திருக்கின்றோம்.

மேலும் வேண்டுகோள்கள் கிடைக்கப் பெறும்பட்சத்தில் அவற்றையும் பரிசீலனை செய்து நிறைவேற்றித்தரத்தயாராக இருக்கின்றோம்.

அதேபோல, கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பல்லாயிரம் லட்சம் ரூபாய் செலவிலே திட்டங்கள் அமுலாகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியலிலே ஏராளமான சவால்களை எதிர் கொண்டது.

முன்னாள் ஆட்சியாளர்களின் எடுபிடியாக இருந்த இந்த ஏறாவூரைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் பொதுத் தேர்தலுக்குமுன்தான்பதவியை இராஜினாமா செய்கின்றேன் என ஒரு நாடகமாடினார்.

முஸ்லிம் காங்கிரஸை மக்கள் மத்தியிலே செல்வாக்கற்றதாக ஆக்கவேண்டும் என்பதுதான் அவரது உள்நோக்கம்.

தொடர்ந்து 3, 4 முறை தேசியப்பட்டியல் ஆசனம் கொடுத்தும் மீண்டும் தனக்கு தேசியப் பட்டியல் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் அது கிடைக்காமல் போகும் என்ற ஆதங்கத்தினால் மீண்டும் கட்சிக்குள் குழிபறிக்கின்ற கைங்கரியத்தை அவர் செய்து பார்த்தார்.

அந்த நேரத்திலே எங்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் கை கொடுத்தவர் இந்த ஊரைச் சேர்ந்த தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா.

அதனைப் பொறுப்புணர்ச்சியோடு சொல்லி வைப்பதில் நான் பெருமைப் படுகின்றேன்.

மக்கள் சில கேள்விகளை எழுப்புகின்றமையால் நாங்கள் இதனைக்குறிப்பிட வேண்டும். முதலமைச்சரின் வெற்றியில் அலிஸாஹிர் மௌலானாவின் பங்கும் உண்டு.

கட்சித் தலைவர் என்கின்ற வகையில் நான் கட்சிக்குள் சல சலப்புக்கள் ஏற்படாமல் இருக்கின்ற விடயத்திலே வெளிப்படையாக சில மனஸ்தாபங்களைக் கையாள வேண்டியுள்ளது.

முதலமைச்சர் இந்த மாகாணத்திலே மிக லாவகமாக திறமையாக நிர்வாகத்தைக் கொண்டு செல்கின்றார் என்ற விடயத்தைப் பாராட்டுவதோடு இன்னும் விட்டுக் கொடுப்புக்களைச் செய்து எதிரிகளை முறியடிக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்த தேர்தல், அதற்கடுத்த ஆட்சி எல்லாவற்றிலும் கிழக்குப் பூமி சௌபாக்யம் நிறைந்ததாக - இன ஒற்றுமை மிளிரக் கூடியதாக - மலர வேண்டும். அதற்கான ஆயத்தங்களை நாங்கள் புரிந்துணர்வோடு செய்ய வேண்டும் என்பதை அன்புக் கட்டளையாக முன்வைக்கின்றேன் என்றும் அவர் தெரிளவித்துள்ளார்.

# தளவாய் தமிழ்ப் பாடசாலையின் காணி மீளவும் பாடசாலைக்கு கொடுக்கப்பட்டது!



மட்டக்களப்பு, ஒக. 22

மட்டக்களப்பு - தளவாய் கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்ப் பாடசாலைக்கு சொந்தமான காணி மீளவும் பாடசாலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பற்று, தளவாய்க் கிராமத்தில் அமைந்துள்ளதமிழ் பாடசாலைக்குச் சொந்தமான மைதானம் 1935ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை மைதானமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அண்மித்த சில நாள்களுக்கு முன்பு சகோதர சமூகத்தைச் சேர்ந்த ஒருவர்இந்தக்காணியை தனக்குரியது எனக் கூறி வேலியமைத்திருந்தார்.

அதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள், பாடசாலை மாணவர்கள் இணைந்து காணி அபகரிப்பிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த நான் மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன், இதற்கான தீர்வைப் பெற்றுத் தருவேன் எனவும் உறுதியளித்திருந்தேன்.

இந்த விடயம் தொடர்பாக நான் சம்பந்தப்பட்டவர்களுடன்8இற்கு மேற்பட்ட தடவைகள் நேரடியாக சந்தித்துப் பேசியிருந்தேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனுக்கும், காணி விடுவிப்பு தொடர்பில் பாடுபட்டவர்களுக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (க)

# வலைகள் திருட்டு; ஆர்ப்பாட்டத்தில் காத்தான்குடிப் பகுதி மீனவர்கள்!

மட்டக்களப்பு, ஒக. 22

வலைகளை திருடுவதற்கும், வலைகளை சேதப்படுத்துவதற்கும் எதிராக காத்தான்குடி மீனவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை காத்தான்குடி கடற்கரைக்கு முன்பாக நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது தேற்றாத்தீவு மற்றும் களுதாவளை பிரதேசங்களைச் சேர்ந்த சில மீனவக் குழுவினரே இந்தச் செயற்பாட்டை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் காத்தான் குடி பிரதேச செயலகம் வரை சென்று மகஜரொன்றும் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# வைஸ் அட்மிரல் சின்னையாவினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 22 வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, இலங்கைக் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்படுவது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று தேசியசுதந்திரமுன்னணி எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணிவெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவின் இனத்துவ அடையாளம் பற்றி நாங்கள் கவலை கொள்ளவில்லை. தமிழரோ, முஸ்லிமோ எவராக இருந்தாலும் தகுதியானவராக இருந்தால் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்படலாம்.

ஆனால், வைஸ் அட்மிரல் ட்ராவிஸ்சின்னையா போர் முடிவடைந்த பின்னர் கடற்படையில் இருந்து ஓய்வு பெற்றவர்.

அத்துடன், அவர் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் தூதரக பாதுகாப்பு நிபுணராக பணியாற்றியவர். அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் அவருக்கு ஊதியம் கொடுத்துள்ளது.

வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா கடற்படையில் இருந்து சட்டபூர்வமாக ஓய்வு பெற்றிருந்தாலும், அவரது ஓய்வு அரசியல் பழிவாங்கல் என்று கூறி தற்போதைய அரசு அவரை மீண்டும் பணியில் சேர்த்து கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதியாக நியமித்தது. இப்போது அவரை கடற்படைத் தளபதியாகவும் நியமித்துள்ளது.

கடற்படையின் மரபுகளை மீறி, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் இருந்து நான்கு ஆண்டுகள் ஊதியம் பெற்ற ஒருவரை, அரசு தளபதியாக நியமித்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு அமெரிக்கா தொடர்ச்சியாக முயற்சித்து வந்திருக்கிறது.

இப்போது அமெரிக்காவுக்குச் சார்பாக செயற்படக் கூடிய ஒருவர் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் இல்லையா? என்றும் தேசியசுதந்திரமுன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

# பென்டகனிடம் சம்பளம் வாங்கியவர் சின்னையா!



விமல் வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, ஓக. 22 அமெரிக்க இராணுவத் தலைமையகத்திடமிருந்து (பென்டகன்) சம்பளம் வாங்கிய சின்னையாவை கடற்படைத் தளபதியாக நியமித்து தேசிய பாதுகாப்பை அரசு பலிகொடுத்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையின் 21 ஆவது தளபதியாக ரியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே அவர் அமெரிக்காவுக்கு சார்பானவர் என்ற குற்றச்சாட்டை மஹிந்த அணி உறுப்பினரானவிமல் வீரவன்ஸ முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் முடிவடைந்ததும் அவர் கடற்படையிலிருந்து பதவி விலகிச் சென்றார். அதற்குரிய கடிதத்தையும் கையளித்திருந்தார். அதன் பின்னர் அமெரிக்கத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக நான்கு வருடங்கள் பணியாற்றினார். அவருக்கு அமெரிக்க இராணுவத் தலைமையகத்தில் இருந்தே சம்பளம் வழங்கப்பட்டது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் அரசியல் பழிவாங்கலுக்குள்ளானவர் என்ற போர்வையில் சின்னையா மீண்டும் கடற்படைக்கு உள்வாங்கப்பட்டு, கிழக்குப் பிராந்தியத்துக்கான கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறானதொரு பின் புலத்தில் தற்போது கடற்படைத் தளபதியாக்கப்பட்டுள்ளார்.

இராணுவம், கடற்படையைச் சேர்ந்த புலனாய்வாளர்களை சிறையில் அடைத்து தேசிய பாதுகாப்பை தினம், அரசு பலிகொடுத்துவருகின்றது.

வடக்கில் இன்று பொலிஸார் தமது கடமையைச் செய்ய முடியாதுள்ளது. நீதிபதி ஒருவரால்கூட இன்று சுதந்திரமாக நடமாட முடியாதுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

# உலகில் எங்குமில்லாத அரசு இலங்கையிலேயே உள்ளது!

## வியக்கின்றார் மஹிந்த!



உலகில்இல்லாதவியக்கத்தக்க அரசு இலங்கையில்உள்ளதுஎனமுன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமக்குத் தாமே சேறு பூசிக் கொள்ளும் மோசமான நிலையில் சமகால அரசு உள்ளது என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போது மஹிந்த இந்த குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் சிலர் பதவிகளில் இருந்து கொண்டே சமகால அரசாங்கத்தை கடுமை யாக விமர்சித்து வருகின்றனர்.

நாட்டை ஆட்சி செய்யும் தலைவர்களிடம் எவ்வித ஒழுக்கமும் இல்லை. மதிப்புகள் அழிக்கப்பட்டுள்ளன.

அரசில் ஒருவருக்கு ஒருவர் மீது நம்பிக்கை இல்லை. வைராக்கியம், கோபம், பழி வாங்குதல் அதிகரித்துள்ளது.

நாட்டை ஆட்சி செய்பவர்கள் இப்படி என்றால் அதற்கு மேல் என்ன உள்ளது. நாட்டில் பௌத்த மதத்திற்கு தடை இல்லை என புத்த சாசன அமைச்சரே கூறுகின்றார்.

ஜப்பான் மோட்டார் சைக்கிள்களை இங்கு குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் அவ்வாறான எந்தவொரு மோட்டார் சைக்கிள்களும் நாட்டில் இல்லை. ஜப்பானிலேயே இந்த ரக மோட்டார் சைக்கிள்கள் உள்ளனவா எனத் தெரியவில்லை. எல்லாம் வெற்று பேச்சில் மாத்திரம் அடங்கியுள்ளது.

அமைச்சர்கள், உறுப்பினர்கள் அரசு குறித்து குறை கூறுகின்றார்கள்; விமர்சிக்கின்றார்கள், அவ்வாறு கூறிக் கொண்டே அரசில் செயற்படுகின்றார்கள்.

உலகின் புதுமையான அரசு என இதனைக் கூறினால் தவறில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 20 ஆயிரம் பேருக்கு விரைவில் அபிவிருத்தி உதவியாளர் நியமனம்!

## பிரதமர் ரணில் அறிவிப்பு

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால், அபிவிருத்தி உதவியாளர்களாக 20 ஆயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு- ஏறாவூரில் நேற்றுமுன்தினம் புதிய நகரசபை கட்டட வளாகத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே, பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

அபிவிருத்தி உதவியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன.

சிறிய நடுத்தர தொழிற்றுறை மற்றும் பெண் தொழிற்துறைகளை பலப்படுத்தும் வகையில், புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் அபிவிருத்தி உதவியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசு கடன்சுமையை வெற்றிகரமாக கையாண்டுள்ளது. வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்கும் எம்மால் தீர்வு காணமுடியும்.

கூட்டுஅரசுமெதுவாக,ஆனால்,உறுதியாக முன்னேறிச் செல்கிறது. கிழக்கு மாகாணத்தில் 1700 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பத்தாயிரம் மெற்றிக் தொன் குப்பை நாளாந்தம் சேகரிப்பு!

இலங்கையில் நாளாந்தம் பத்தாயிரம் மெற்றிக் தொன் அளவிலான குப்பை சேகரிக்கப்படுகிறது என பரிசரயடயுக்திய என்ற சூழல் பாதுகாப்பு அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

கொழும்பு மாநகர எல்லைக்குள் மட்டும் தினமொன்றுக்கு 6,500 மெற்றிக் தொன் எடை கொண்ட குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன என இதன்போது தெரியவந்துள்ளது.

இதில் 25 வீதமான குப்பைகள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்றவற்றைக் கொண்டிருக்கின்றன என்றும் சூழல் பாதுகாப்பு அமைப்பு கண்டறிந்துள்ளது.

# அமைச்சர் பதவியில் இருந்து விலக மாட்டேன்: விஜயதாஸ!



நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் பதவியில் இருந்து தாம் விலகப்போவதில்லை என்று- விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக என் மீது சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். அதனால், அமைச்சர் பதவியில் இருந்து விலகும் எண்ணம் எனக்கு இல்லை.

எனக்குஎதிரானஎல்லா குற்றச்சாட்டுகளுக்கும் பதில் அளிப்பேன்.

நான் பதவி விலகுவதாக அறிவிக்கப் போவதில்லை. அதனைச் செய்யவும் மாட்டேன். ஜனாதிபதியே முடிவெடுக்கட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ தனது பதவி விலகல் அறிவிப்பை வெளியிடுவார் என்று நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொழில்நுட்ப அலுவலர்; ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் இலங்கை தொழில் நுட்ப சேவையைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் மற்றும் பயிற்சி தரத்தினரை. ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர், செயலாளர், பொதுச்சேவைகள் ஆணைக்குழு, வடக்கு மாகாணம், நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் சீ.ஏ.மோகன்ராஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றுவோரில் தொழில்நுட்ப அலுவலர் மற்றும் பயிற்சித் தரத்தில் இணைந்து கொள்ள விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மீன் பிடிக்கச் சென்றவருக்கு ஆபத்து; விரைந்து செயற்பட்ட கடற்படையினர்!



கொழும்பு, ஓக. 22

களுத்துறை மாவட்டத்தில் பேருவளை பகுதியில் மீன் பிடிக்கச் சென்று ஆபத்தில் சிக்கிய இளைஞரை இலங்கை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

இந்த நபருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் அவர் படகில் ஆபத்தான நிலையில் இருந்துள்ளார்.

இவரை கடற் படையினர் பாதுகாப்பாக மீட்டு காலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

பேருவளை மீன்பிடி துறைமுகத்திலிருந்து படகு ஒன்றில் இந்த நபர் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது இவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் ஆபத்தான நிலையை அடைந்தார்.

இது குறித்து பேருவளை பொலிஸார், கடற்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அந்த இடத்திற்கு விரைந்த தென் கடற்படை கட்டளைப் பிரிவின் கடற்படையினர் பாதிக்கப்பட்டவரை காப்பாற்றி காலி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# கலைமாணி கற்கை பரீட்சைக்கான திசைமுகப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 22

கலைமாணி பகுதி I 2014 (வெளிவாரி) பழைய பாடத்திட்டத்தின் பட்டக் கற்கை நெறிக்கான பரீட்சைகள் ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. அப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி திசை முகப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான நேர அட்டவணையை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணையத்திலும் (WWW.codl.jfn.ac.lk) முகப் புத்தகத்திலும் (www.ebook.c.com/uoj.cod) பார்வையிடலாம் என்று பணிப் பாளர் அறிவித்துள்ளார். (இ)

## தினசரி ராசி பலன் 22.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 06 ஆம் நாள் பிரதமைத் திதி இரவு 10.15 மணி வரை. பின்னர் துவிதீயை. நட்சத்திரம். மகம் பகல் 2.34 மணி வரை. பின்னர் பூரம். சித்தயோகம் முழுவதும். ராகு காலம். மாலை 3.18 மணி முதல் 4.50 மணி வரை. சுபநேரம் பகல் 10.34 மணி முதல் 12.04 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை பிரதமை. பிறந்த நட்சத்திர வழிபாடு. மகம்

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரத்தில் பல நுணுக்க முறைகளைக்கையாண்டு முன்னேற்றமடைவார்கள்.

**ரிஷபம்:** யோசனையான நாள். பண வரவு குறையும். உடன்பிறந்தவர்களுடன் சொத்துப்பிரச்சினையால் புது சிக்கல் உருவாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகரித்து சிரமம் உண்டாகும்.

**மிதுனம்:** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உடலில் ரோக பலன் உண்டாகும், மருத்துவச் செலவு அதிகரிக்கும். சுப காரியங்களில் தடை உண்டாகும்.

**கடகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். பெரியோர்களால் புதுப்பிரச்சினைகள் உருவாகி விலகும். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும்.

**சிம்மம்:** சுபீட்சமான நாள். தன லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கூடும்.

**கன்னி:** சலனம் மிகுந்த நாள். விருந்தினர் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். வீண் அலைச்சல், கடுமையான உழைப்பு உடலைப் பாதிக்கும். குடும்ப உறவில் சலசலப்பு ஏற்படும்.

**துலாம்:** நன்மையான நாள். திடீர் பணவரவு உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் அடையும். விட்டுப்பிரிந்த உறவுகள் வலிய வந்து சேரும்.

**விருச்சிகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் குழப்பம் நிலவும். பொருட்கள் காணாமால் போகும். அடைவுவைத்த பொருள்கள் கைவிட்டுப் போகும்.

**தனுசு:** யோகமான நாள். தாராள பணவரவும், நினைத்த காரியம் நிறைவேறும். வெளிநாட்டுப் பயண முயற்சியில் வெற்றியும் மகிழ்ச்சியைத் தரும். சுப காரியங்கள் போற்றும் வகையில் முடிந்தேறும்.

**மகரம்:** குழப்பமான நாள். பணத்தட்டுப்பாடு உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு சில சோதனைகள் வீடு தேடிவரும். பொன், வெள்ளி, ஆடம்பரப் பொருள்களால் சிக்கல்கள் உருவாகும்.

**கும்பம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் பெரும் பிரயத்தனத்தின் மீதே அடைய முடியும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள்.

**மீனம்:** மேன்மையான நாள். பொருள் வரவு மேன்மை அடையும். புதிய வாய்ப்புகள் வேலை தேடுவோருக்கு அமையும்.

சந்திராட்டமநாள்: உத்தராடம் 2, 3, 4 திருவோணம் அவிட்டம் 1, 2 ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் இந் நாளில் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# சாவகச்சேரி இளைஞன் ஒருவர் ஆஸி. தேர்தலில் குதிக்கின்றார்

## பசுமைக் கட்சியின் வேட்பாளராக

யாழ்ப்பாணம், ஓக.22

ஆஸ்திரேலிய தேர்தலில் பசுமைக் கட்சியின் வேட்பாளராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் போட்டியிடவுள்ளார். சாவகச்சேரியைச் சேர்ந்த 31 வயதான சுஜன் செல்வன் எனும் இளைஞனே தேர்தல் களத்தில் இறங்கவுள்ளார்.

இவர் கடந்த 2000 ஆம் ஆண்டு அகதியாக ஆஸ்திரேலியா சென்றார். இறுதிப் போர் காலப்பகுதியான 2009 இல் விடுதலைப் போராட்டம் தொடர்பாக ஆஸ்திரேலிய மக்களுக்கு கல்விசார் விழிப்புணர்வு ஏற்படுத்துவதை அடிப்படையாக கொண்டு 'வொய்ஸ் ஒப் தமிழ்' என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.

அத்துடன் ஆஸ்திரேலியாவில் மனித உரிமை ஆர்வலராகவும், ஆஸ்திரேலியாவுக்கு தஞ்சம் கோரி செல்பவர்களின் நலன் சார் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் ஒரு முன்னணி செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

இந்த நிலையிலேயே பசுமைக் கட்சியின் வேட்பாளராக சிட்னி தெற்கு பிராந்தியத்தில் தமிழர்கள் அதிகம் வாழும் பிரோஸ்பெக்ட் தொகுதியில் தாம் போட்டியிடவுள்ளமையை அவர் அறிவித்துள்ளார். (ம)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன

## மல்லாவி மத்.கல்லூரியில் கற்றவர்களுக்கு



முல்லைத்தீவு, ஓக.22

மல்லாவி மத்திய கல்லூரியில் கல்வி பயின்று 2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய மருத்துவ, பொறியியல் மற்றும் கணக்கியல் மாணவர்கள் ஒன்பது பேருக்கு நன்கொடையாளர் திருமதி சாளினி விக்கிரமசிங்கவின் நிதி ஏற்பாட்டில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் பாடசாலை அதிபர் மற்றும் வலயக்கல்வி ஆரம்ப நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

திருமதி சாளினி விக்கிரமசிங்க கஷ்ட நிலையிலும் திறமையான கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிகளை வழங்கி வருகின்றார்.

தென்னிலங்கையிலும் வடக்கிலும் பல இடங்களில் உள்ள மாணவர்களுக்கு இவர் கற்றலுக்கான உதவிகளை வழங்கியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-81)

# சீனாவின் கடன் பொறி: ஆபத்தில் இருந்து தப்புமா சிறிலங்கா?

## இராஜதந்திரத்தால் மட்டுமே சாதிக்கலாம்

வழிமூலம் - The diplomat
ஆங்கிலத்தில்- Umesh Mora mudali
மொழியாக்கம் - நித்தியபாரதி






அண்மையில் சிறிலங்கா அரசு, சீன அரசுக்குச் சொந்தமான China Merchants Port Holdings Company Limited (CMPort) நிறுவனத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான சலுகை ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 70 சதவீத உரிமை சீன நிறுவனத்திற்கு வழங்கப்படுவதுடன் சிறிலங்கா துறைமுக அதிகாரசபைக்கு மீதிப் பங்கு உரிமையாக வழங்கப்படுகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. சிறிலங்கா அரசு தன் மீதான கடன் சுமையைக் குறைப்பதற்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் ஒரு பகுதியைக் குத்தகைக்கு வழங்குவது மட்டுமே சிறந்த தெரிவாகக் கொண்டுள்ளது.

தற்போது சிறிலங்கா மிகையான கடன் சுமைக்குள் சிக்கித் தவிக்கின்றது. சிறிலங்கா நடுத்தர வருமான நாடாகத் தன்னை உயர்த்திக் கொண்டுள்ள அதேவேளையில், அது பெற்றுக்கொண்ட சலுகைக் கடன் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சிறிலங்கா அரசாங்கம் வர்த்தகக் கடனைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதற்கும் அப்பால், சீனா எக்சிம் வங்கியால் சிறிலங்காவிற்கு உயர் வட்டி வீதத்தில் கடன் வழங்கப்பட்டது. இதற்கான நிதி வர்த்தக வட்டி விகிதத்தில் இறையாண்மை பத்திரத்தின் ஊடாகத் திரட்டப்பட்டது.

### அதிகரித்த கடன்

இதன் விளைவாக, கடந்த பத்தாண்டாக சிறிலங்காவின் வெளிக் கடனின் அளவானது வியத்தகு அளவில் மாறியுள்ளது. 2006 இல் சிறிலங்கா பெற்றுக்கொண்ட வெளியகக் கடனின் 6 சதவீதம் மட்டுமே வர்த்தகக் கடனாகக் காணப்பட்டது. ஆனால் 2012 இல் இது 50 சதவீதமாக அதிகரித்தது. குறிப்பாக இதற்கான வட்டி வீதம் மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது. இக்கடன் சுமை சிறிலங்காவை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

2006 இல் சிறிலங்காவின் வெளியகக் கடன் ஆயிரத்து 60 கோடி டொலராகும். கடந்த ஒரு பத்தாண்டுக்குள் வெளியகக் கடன் 140 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2016 இன் இறுதியில், சிறிலங்காவின் வெளியகக் கடன் 2 ஆயிரத்து 530 கோடி டொலராக அதிகரித்தது. இது நாட்டின் மொத்தத் உள்நாட்டு உற்பத்தியின் 34 சத வீதமாகும்.

சிறிலங்காவால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 13 சதவீதம் அதாவது 330 கோடி டொலர் சீனாவிற்குச் சொந்தமானதாகும். இதில் அதிகளவான கடன் கடந்த பத்தாண்டில் பெறப்பட்டதாகும்.

சிறிலங்கா சீனாவிடமிருந்து அதிகளவான கடனைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னைய ஆட்சியாளரான மஹிந்த ராஜபக்ஷவின் அரசும் பொறுப்பேற்க வேண்டும்.

### சீனாவுடன் மஹிந்த நெருக்கமான உறவு

மேற்குலக நாடுகளில் ராஜபக்ஷ ஒரு பிரபலமான தலைவர் அல்லர். ஆனால் ராஜபக்ஷ, சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணியிருந்தார். அத்துடன் ராஜபக்ஷ தனது நாட்டில் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்கான கடனை சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்வதில் தயக்கம் காண்பிக்கவில்லை.

அம்பாந்தோட்டைத் துறை முகம் 99 ஆண்டு கால குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்துறைமுகம் சீனாவின் நிதியில் ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. சீனாவிடமிருந்து கடன் பெற்றே இத்துறைமுகம் கட்டப்பட்ட போதிலும், இது சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது எனக் கருத முடியாது.

ஆனால், சிறிலங்காவில் ஆட்சி மாறிய பின்னர் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டுவதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை அடைப்பதற்கு சிறிலங்கா அரசுக்கு நெருக்கடியாக இருந்ததால் அதனை நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதென தீர்மானித்தது. அத்துடன், அம்பாந்தோட்டைத் துறை முகத்தின் மீதும் இதற்கு அருகிலுள்ள மத்தள விமானநிலையத்தின் மீதும் இடப்பட்ட முதலீட்டிற்கு எதிர்பார்த் தளவு வருவாய் கிட்டவில்லை.

இதனால் சீனாவின் எக்சிம் வங்கிக்கு கடனைத் திருப்பிச் செலுத்துவது சிறிலங்காவிற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இதனால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவிடம் பகிர்ந்து கொள்வதென அரசு தீர்மானித்தது.

### இந்தியா அதிருப்தி

சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடன் சிறிலங்காவின் மூலோபாய அமைவிடங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதலீடு செய்யப்பட்டதுடன் தற்போது இவற்றில் சீனா தனது அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார இராஜதந்திரத்தின் ஊடாக தென்னாசியப் பிராந்தியத்தில் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தும் சீனாவின் மூலோபாயத்தை இந்தியா மிகவும் நெருக்கமாக அவதானித்துள்ளது. இது தொடர்பில் இந்தியா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன் இதன் விளைவாக சிறிலங்கா அரசு இருதலைக்கொள்ளி நிலைக்குத் தள்ளப்பட்டது.

சீனாவின் சிறிலங்கா மீதான பொருளாதார அதிகாரத்துவமானது கடன் என்பதுடன் மட்டுமல்லாது, முதலீடுகளையும் நோக்காகக் கொண்டிருந்தது. 2005 இல், சீனாவிடமிருந்து பெறப்பட்ட வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடு 10 லட்சம் டொலருக்கும் குறைவாகவே காணப்பட்டது.

ஆனால் 2014 இல் இது 40 கோடி டொலர் வரை அதிகரித்தது. இக்கடன் மூலமே கொழும்புத் துறை முக நகரத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் பின்னர் கொழும்பு அனைத்துலக நிதிமையமாக பெயர் மாற்றப்பட்டது. இந்தத் திட்டம் சிறிலங்காவின் இறையாண்மை தொடர்பான கேள்வியை எழுப்பியது. அதாவது இத்திட்டத்தின் மூலம் கொழும்புத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள நிலம் 99 ஆண்டுகாலக் குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கப்பட்டதால் இது சர்ச்சைக்குரிய திட்டமாக அடையாளம் காணப்பட்டது.

கடந்த பத்தாண்டில், சீனா விடமிருந்து 110 கோடி டொலர் நிதி நேரடி வெளிநாட்டு முதலீடாகப் பெறப்பட்டது. இதே காலப்பகுதியில் சிறிலங்காவால் அமெரிக்காவிடமிருந்து 40 கோடி டொலர் மட்டுமே நேரடி வெளிநாட்டு முத லீடாகப் பெறப்பட்டது.

### சீனாவின் உதவியை நாடியது சிறிலங்கா

சிறிலங்காவில் இடம்பெற்ற மீறல்கள் மேற்குலகின் அதிருப்தியைச் சம்பாதிக்கக் காரணமாகியது. இதனால் சிறிலங்கா வேறெந்தத் தெரிவும் இல்லாததால் சீனாவின் உதவியை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளியது. பணம் தேவைப்படும் இடத்தில் சீனா இருக்கும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

சீனா தனது பூகோள அரசியல் இருப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் ஓர் அணை ஒரு பாதை என்கின்ற திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது.

சீனா தனது திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காக இந்திய மாக்கடலில் உள்ள சில நாடுகளில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இந்தவகையில் சிறிலங்காவும் சீனாவின் உதவியைப் பெறும் நாடுகளில் ஒன்றாக உள்ளதால் சிறிலங்கா தனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பைக் கைநழுவ விரும்பவில்லை.

சிறிலங்காவில் மட்டுமல்லாது பாகிஸ்தானின் குவடார் துறைமுகத்திலும் பங்களாதேஷிலும் சீனா முதலீடு செய்துள்ளது. இந்தவகையில், சிறிலங்கா வீழ்ச்சியடைந்திருந்த தனது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு வாய்ப்பாக சீனாவின் உதவியைப் பயன்படுத்தியது.

எனினும், கடன் போன்ற இராஜதந்திர நடவடிக்கைகளைச் சரியாகக் கையாளாவிட்டால் சிறிலங்கா சீனாவின் பொறிக்குள் விழுந்துவிடும் ஆபத்து உள்ளது.

ஆகவே, சிறிலங்கா இந்த விடயத்தை மிகவும் சரியான வகையில் கையாள்வதுடன், இது சிறிலங்காவுக்கு ஒரு சவாலான பணியாகவும் காணப்படும் என்பதால் தேவைப்படும் இடங்களில் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வதன் மூலம் சமவலுவைப் பேணித் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிகளை சிறிலங்கா கண்டறிய வேண்டும்.

இதுமட்டுமல்லாது அவசியமான வேளைகளில் தனது நாட்டின் தேசிய நலனை உறுதிப்படுத்துவதற்கும் சிறிலங்கா மறந்து விடக் கூடாது.★






தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

கூடுதலான வட கொரிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் நாடுகளைத் தடை செய்வதோடு, வட கொரியாவுடனான புதிய கூட்டு முயற்சிகளையும் அல்லது தற்போதைய கூட்டு நிறுவனங்களில் புதிய முதலீடுகளையும் தடை செய்கின்றது. இது பயணக் கட்டுப்பாடு மற்றும் சொத்து முடக்கம் ஆகிய வற்றுக்கான ஐ.நா. தடுப்புப் பட்டியலில் ஒன்பது தனிநபர்களையும், நான்கு வணிக நிறுவனங்களையும் சேர்க்கின்றது. இது, நாட்டின் முக்கிய அந்நிய செலாவணி வங்கியாகச் செயற்படும் வட கொரிய அரசுக்குச் சொந்தமான வெளிநாட்டு வர்த்தக வங்கியையும் உள்ளடக்கியது.

ஐ.நாவின் அமெரிக்க தூதரான நிக்கி ஹேலி, இந்தத் தீர்மானம் ஒரு தலைமுறையில் எந்தவொரு நாட்டின் மீதும் மிகக் கடுமையான தொகுப்பு பொருளாதாரத் தடைகளை சுமத்தியுள்ளது என்று பெருமையடித்து கொண்டார். பின்னர் Fox News முதன்முதலாக நாங்கள் அவர்களின் வயிற்றில் ஓர் உதை கொடுத்தோம்...... அதை அவர்கள் இப்போதே உணர ஆரம்பிக்கிறார்கள் என்றார்.

ஐ.நாவில் பேசியபோது, தீர்மானத்தை ஆதரிப்பதற்காக சீனாவை ஹேலி பாராட்டியபோதும், பின் வருமாறு எச்சரிக்கவும் செய்தார். நாம் பிரச்சினையை தீர்த்துவிட்டோம் என நினைத்துக்கொண்டு நம்மை நாமே முட்டாளாக்கிக் கொள்ளக்கூடாது. முடித்துக்கொள்ளவும் கூடாது. வட கொரிய அச்சுறுத்தல் நம்மை விட்டு விலகவில்லை, இது விரைவாக வளர்ந்துவரும் மிக மோசமான அபாயமாகும். மேலதிக நடவடிக்கை தேவையாகவுள்ளது.

> பென்டகன் இராணுவப் படையின் காட்சி ஒன்றை தொடர்ந்து மற்றொன்று என்ற வகையில், கொரிய தீபகற்பம் மீது இரண்டு மூலோபாய B1 ரக குண்டு வீசிகளை அனுப்பியதை தொடர்ந்து கடலுக்குள் ஏவுகணைகளை நிறுவுவது உட்பட, தென் கொரியா உடனான கூட்டு நேரடி துப்பாக்கிச் சூடு பயிற்சிகளை நடத்தியது.

ஜூலை 28 ஆம் திகதி அன்று அமெரிக்காவின் பிரதான நிலப் பகுதியைச் சென்று தாக்கும் சாத்தியமுள்ள கண்டம் விட்டு கண்டம் பாயும் நீண்ட தூர ஏவுகணை ஒன்றை வடகொரியாநிறுவியதைத்தொடர்ந்து, அமெரிக்கா சீனா மீதான அழுத்தத்தை மிகப்பெரியளவில் அதிகரித்தது. பெய்ஜிங் ''வட கொரியா தொடர்பாக எங்களுக்கு எதுவும் செய்ய வேண்டியதில்லை'' என்று ஜனாதிபதி அதனிடம் கோபமாக வெடித்தார். மேலும் ''இதைத் தொடர்வதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்'' என்றும் எச்சரித்தார்.

பென்டகன் இராணுவப் படையின் காட்சி ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று என்ற வகையில், கொரிய தீபகற்பம் மீது இரண்டு மூலோபாய B1 ரக குண்டு வீசிகளை அனுப்பியதைத் தொடர்ந்து கடலுக்குள் ஏவுகணைகளை நிறுவுவது உட்பட,




தென் கொரியா உடனான கூட்டு நேரடி துப்பாக்கிச் சூடு பயிற்சிகளை நடத்தியது. இந்த ஆண்டின் அதன் நான்காவது அறிமுக சோதனையாக பசுபிக் மீது அமெரிக்கா தனது சொந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (ICBM) சோதனையை நடத்தியது.

ட்ரம்ப் நிர்வாகம், அறிவுசார் சொத்துரிமைகள் பற்றிய விவகாரத்தில் சீனவுக்கு எதிரான வர்த்தகப் போர் நடவடிக்கைகளுக்கு தயாரிப்புகள் செய்ததாகக் கடந்த வாரம் நிகழ்ந்த தகவல் கசிவுகளால் சீனாவின் நுழை வாயிலில் போருக்கான அமெரிக்காவின் அச்சுறுத்தல் அதிகரித்திருந்தது. சீனாவிற்கு எதிராக அமெரிக்க வர்த்தக அபராதங்கள் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனத் தோன்றுகிறது.

தற்போது விடுப்பில் இருக்கும் ட்ரம்ப், வட கொரியா மீது மிகப்பெரிய நிதியியல் தாக்கத்தை கொண்டிருக்கும் பொருளாதாரத் தடைகளை அறிவிக்கும் ஐ.நாவின் தீர்மானத்துக்கு அவரது ஒப்புதலை ட்வீட் செய்தார். புதிய பொருளாதாரத் தடைகளை ஆதரிப்பதற்காக சீனாவையும் ரஷ்யாவையும் அவர் பாராட்டினார்.

இருப்பினும், பெய்ஜிங், வட கொரியாவுடன் பேச்சுகளை ஆரம்பிக்க தனது சொந்த முன்மொழிவை முன்வைக்க தொடர்ந்து முயன்று வருகிறது - அது பியோங்யாங் அதன் அணுஆயுத மற்றும் ஏவுகணை சோதனைகளை நிறுத்துவது மற்றும் அதற்குப் பதிலாக அமெரிக்காவும், தென் கொரியாவும் அவற்றின் பிரதான கூட்டு இராணுவ பயிற்சிகளை முடக்குவது உள்ளிட்டவை. வொஷிங்டன், வட கொரியாவுடனான போருக்கான ஓர் ஒத்திகைக்கு ஒப்பான இந்த இராணுவப் பயிற்சிகள் குறித்த எந்த வொரு நிறுத்தத்தையும் மீண்டும் மீண்டும் நிராகரித்துள்ளது.

ஐ.நாவுக்கான சீன தூதரான லியு ஜீயும், தென்கொரியாவில் ஒரு முனைய அதிஉயர பகுதி பாதுகாப்பு (Terminal High Altitude Area Defence-THAAD) கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை எதிர்ப்பு பாட்டரியை அமெரிக்கா பயன்படுத்துவது குறித்த பெய்ஜிங்கின் எதிர்ப்பை மீண்டும் வலியுறுத்தினார். பெயரளவில் வட கொரியாவுக்கு எதிராக இதன் இலக்கு உள்ள போதிலும், இந்த THAAD நிறுவுதல் அமெரிக்க இராணுவத்தை சீன பிராந்தியத்துக்குள் ஆழ்ந்து செல்ல அனுமதிக்கின்றது. வொஷிங்டன், இந்த பயன்பாடு தொடர்பான எந்த வொரு நிறுத்தத்தையும் தள்ளுபடி செய்துவிட்டது.


வார இறுதி நாள்களில், மணிலாவில் நடைபெற்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் (Association of South East Asian Nations-ASEAN) பிராந்திய கருத்துக்களத்தில், சீனாவின் வெளியுறவு மந்திரி வாங் தனது வட கொரிய சமதரப்பினரான ரி வோங்-ஹோவைச் சந்தித்தார். அவர் செய்தி ஊடகத்திடம் பியோங்யாங்கை பின்வருமாறு எச்சரித்தோர் என கூறினார்: ஏவுகணை நிறுவுதல் அல்லது அணு ஆயுத சோதனைகளை நடத்துவதன் மூலம் ஐ.நாவின் தீர்மானத்தை மீற வேண்டாம் அல்லது சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்திற்கு எரிச்சலூட்ட வேண்டாம்.

எவ்வாறெனினும், வாங், ''அமெரிக்கா மற்றும் தென் கொரியா போன்ற பிற கட்சிகளும் பதற்றங்களை அதிகரிப்பதை நிறுத்த வேண்டும்'' என்று வலியுறுத்தினார். பொருளாதாரத் தடைகள் அவையாகவே ஒரு முடிவாக இருக்கவில்லையென அவர் கூறியதோடுஇ கொரிய தீபகற்ப அணுஆயுத விவகாரத்தை திரும்ப பேச்சுவார்த்தைக்கு உட்படுத்துவதே நோக்கமாகும் என்பதுடன் பேச்சுவார்த்தை மூலம் இறுதித் தீர்வு ஒன்றை அடைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

> பெய்ஜிங்கின் வலுயுறுத்தலின் பேரில், அமெரிக்கா, சீனா, இரண்டு கொரியாக்கள், ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகியவை சம்பந்தப்பட்ட ஆறு கட்சி பேச்சுவார்த்தைகளுக்கு திரும்ப அனைத்து தரப்பினருக்கும் ஐ.நா. அழைப்பு விடுத்தது.

பெய்ஜிங்கின் வலுயுறுத்தலின் பேரில் அமெரிக்கா, சீனா இரண்டு கொரியாக்கள், ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகியவை சம்பந்தப்பட்ட ஆறு கட்சி பேச்சுகளுக்கு திரும்ப அனைத்து தரப்பினருக்கும் ஐ.நா. அழைப்பு விடுத்தது. ஆனால், கூடுதல் ஆய்வுகள் மற்றும் பாதுகாப்பு களுக்கு கோரிக்கை விடுப்பதன் மூலம் வட கொரியா அணு ஆயுத ஒழிப்பை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட 2007 உடன்படிக்கையை அமெரிக்க ஜனாதிபதி புஷ் குறைமதிப்புக்கு உட்படுத்திய பின்னர் இந்த பேச்சுவார்த்தைகள் மிகவும் பயனற்றவையாக மாறின.

(கேள்வி தொடரும்)





# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

72




## அத்தியாயம் - V

### கள் இறக்கும் தொழிலாளர்

பாதுகாப்பான புதிய வீடொன்றுக்குச் சென்றவுடன், முதல் வேலையாக, ஒளித்திருக்கும் இடம் தேடுவதையும் தப்பி ஓடும் பாதை தேடுவதையும் வழமையாகக் கொள்ள அனுபவம் பாடம் கற்பித்திருந்தது. ஆனால், இந்தப் பகுதியில் ஓடி ஒளிப்பதற்கு அதிகம் வசதிகள் இருக்கவில்லை. அங்கே ஒரு மயானமும் அதில் சில புதைகுழிகளும் இருந்தன. நடுகல் நடுவதற்காகத் தோண்டிய இடத்தின் அருகே சிறிய குழிகளும் இருந்தன. தேவை ஏற்பட்டால், இந்தக் குழிகளில் எம்முள் ஒருவராவது பதுங்கி இருக்கலாம் என்று எண்ணினேன். பழுதடைந்த அந்த மயானத்துக்கு அருகே படையினர் வரமாட்டார்கள் என்று உறுதியாக நம்பினேன். ஆனால், இப்படியான ஓர் இடத்தில் ஒளிந்து மறைய வேண்டிய தேவை எனக்கு ஏற்படவில்லை என்பதே நிம்மதி.

இந்த மக்களோடு நாம் வசித்தவரை, இந்திய இராணுவத் தலையீட்டால் எமக்குத் தொந்தரவு அதிகம் இருக்கவில்லை. ஆனால், நாம் விலகிச்சென்றபின் அந்தக் குடும்பத்துக்குப் பெரும் உபத்திரவம் ஏற்பட்டிருக்கிறது. அந்த விவரம் பின்னர் பார்க்கலாம். எப்படியாயினும், 1990 இலே நாம் யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் நன்றி கூறுவதற்காக இந்த வீட்டாரை நாம் மீண்டும் தரிசித்தோம்.

### நெருக்கடி நிறைந்த நாள்கள்

இந்தியப் படையினர் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு எதிராக வடமராட்சியில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் வெற்றியை அளிக்கவில்லை. போராளிகள் மத்தியில் பெருமளவு உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை. சுற்றி வளைப்புகளின்போது சில போராளிகள் கொல்லப்பட்டார்கள். சிலர் கைதாகி காவலிலிடப்பட்டார்கள். ஆனால், புலிகளின் பாதுகாப்பான மறைவிடங்களில் இருந்து அவர்களை விரட்ட படையினரால் முடியவில்லை. ஆயுதங்களைக் களைய வந்தவர்கள், கெரில்லாப் போராளிகளுக்கு எதிராக பெரிய கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கை முயற்சியில் ஈடுபட நேர்ந்தது. ஆனால், போராளிகளோ, மாவோவின் உவமானப்படி, மக்கள் கடலோடு கலந்த மீன்கள் போல இருந்தமையால், இராணுவத்தினரின் நடவடிக்கை பிசுபிசுத்துப்போனது. விடாப் பிடியாகத் தேடுதல் நடத்திய இந்தியரிடமிருந்து புலிகள் நழுவுவதில் வெற்றி கண்டார்கள் என்றால், வடமராட்சி மக்களின் விடுதலைப் பற்றும், துணிச்சலுமே, அந்த வெற்றிக்குக் காரணம் என்று கூறலாம். தப்பியோடும் விடுதலைப் புலிப் போராளிகளுக்குப் புகலிடம் அளித்ததாலும் படையினரின் நடமாட்டம் பற்றித் தாமாகவே முன்வந்து தகவல் கூறியமையாலும், தங்கள் உயிரை அர்ப்பணித்த எண்ணற்ற பொதுமக்களை நோக்கி நாம் கரம் கூப்ப வேண்டும். அவர்கள் தன்னலமற்ற துணிச்சல் மிக்க செயல்களில் ஈடுபட்டமையாலும் போராட்டத்தில் கலந்துகொண்டமையாலும் பல உயிர்கள் காப்பற்றப்பட்டன. அதேபோல, எமது போராளிகளுக்கு உதவி புரிந்தமைக்காகக் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் துன்பம் அனுபவித்த பொதுமக்கள் அவமானத்துக்கும், சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்ட போதிலும், வியக்கத்தக்க வகையில் மனோ வலிமையோடு அனைத்தையும் சகித்துக் கொண்டார்கள். இந்தியரைப் பொறுத்த வரையில், குற்றமற்ற பொதுமக்கள் மீது, பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதிலேயே அவர்கள் வெற்றி பெற்றார்கள். இந்தியப் படைகள் இரவு வேளைகளில் தமது நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்ய முற்பட்டபோதே அவர்களுடைய கொடூரம் உச்சத்தைத் தொட்டது.

இந்திய - விடுதலைப் புலிகள் போர் தொடங்கிய காலத்தில் இருந்தே, மாலை ஆறு மணியில் இருந்து பன்னிரண்டு மணிநேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் வடமராட்சிப் பகுதி செயலிழந்துபோனது என்றே கூறலாம். விடுதலைப் புலிப் போராளிகளும் எம்மைப் போன்றவர்களும் ஓரிடத்தில் இருந்து வேறோர் இடத்திற்கு இரவில் செல்வதை ஒதுக்கினால், அந்தப் பகுதி முழுவதும் மயான அமைதியே இரவில் நிலவியது எனலாம். எமது போராளிகளை இந்தியப் படையினர் இனம் காண்பதற்கு இரவு ஊரடங்கு அவர்களுக்கு உதவியாக இருந்தது. எவராவது ஊரடங்கை மீறினல், அவர்கள் விடுதலைப் புலிப் போராளிகள் என்று இந்தியர் முடிவுசெய்தனர். எனவே, விடுதலைப் புலிகளுக்கு எதிரான பெரிய நடவடிக்கைகளை அவர்கள் நடத்தும் போது இரவு வேளைகளையே தேர்ந்தெடுத்தார்கள். இது, மக்களுக்குப் பெரும் தொந்தரவாகியது. பெருந்தேடுதல் வேட்டை நடத்திக்கொண்டு இந்தியப் படைகள் தங்கள் வீடுகளுக்குள் திடீரென நுழையலாம் என்ற அச்சத்தில் இரவிலேயே நிம்மதியாகத் தூங்குவது மக்களுக்கு இயலாது போயிற்று. சூழ்ச்சி நோக்கத்தோடு இரவுக் காவல் உலாக்களையும் இந்தியர் அதிகரித்தனர். படையினர் எங்கே இருக்கிறார்கள் என்றோ எங்கே தலைகாட்டுவார்கள் என்றோ எவராலும் அனுமானிக்க முடியவில்லை. ஆனால், இரவிலே படையினரின் நடமாட்டத்தை மோப்பம் பிடிப்பதற்கான வழி, எதிர்பாரத கோணத்திலிருந்து கிடைத்தது.

எமது போராளிகள், எமது மறைவிடங்களில் முடியுமான அளவு நோட்டக் காவலை அதிகரித்திருந்தார்கள். ஆனாலும், மனிதனின் மிருக நண்பனான நாய் புரியும் உதவிக்கும் இரவுப் பாதுகாப்புக்கும் நிகராக எதுவும் இல்லை எனலாம். வடமராட்சியில் இருந்த பெருந் தொகையான வீட்டு நாய்களும் தெரு நாய்களுமே எதிர்பாராத அளவிலும் நம்பிக்கை தரும் வகையிலும் அந்தப் பிரதேசத்தில் மிகச் சிறந்த எச்சரிக்கையையும் பாதுகாப்பையும் வழங்கின. இருளின் போர்வையில் எமது போராளிகள் நகரும்போது கிராமத்து நாய்கள் அவ்வளவு பலமாகக் குரைப்பதில்லை என்பதை அவதானித்தோம். அதேசமயம் பெருந்தொகை இந்தியப் படையினர் தங்களுடைய சப்பாத்துக்களை அடித்து நடக்கும்போது வயிற்றைப் பிடுங்குவது போல நாய்கள் உரத்துக் குரைக்கும்.

> *புலிப் போராளிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் நடத்திய இராணுவ நடவடிக்கைகளில் காவல் உலாவோடு மட்டும் அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. எண்ணிக்கையில் கூடுதலான புலிகளை அவர்கள் சிக்க வைக்க விரும்பினார்கள். எனவே தங்கள் இரவு நடவடிக்கைகளை விரிவுபடுத்தினார்கள். வீதிகளின் அருகே குழிகளிலும், ஒழுங்கைகளிலும் பாலங்களின் கீழும் பதுங்கிக்காத்திருந்தார்கள்.*

உலா செல்லும் படையினரை அதுவே காட்டிக் கொடுத்துவிடும். நாய்கள் குரைக்கும் சத்தத்தின் அளவை வைத்துக் கொண்டு, எமது முகாமுக்கு எவ்வளவு அருகில் படையினர் இருக்கிறார்கள் என்பதை ஊகித்து விடுவோம். எத்தனையோ இரவுகள் விழித்தபடியே படுத்திருந்து நாய்குரைப்பின் ஒலி ஏற்ற இறக்க வேறுபாடுகளுக்கேற்ப படையின் நகர்வை அனுமானித்துக் கொண்ட தருணங்களில் அந்த விசுவாசமுள்ள பிராணிகளுக்கு மனதார நன்றி கூறிக்கொண்டேன்.

புலிப் போராளிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் நடத்திய இராணுவ நடவடிக்கைகளில் காவல் உலாவோடு மட்டும் அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. எண்ணிக்கையில் கூடுதலான புலிகளை அவர்கள் சிக்க வைக்க விரும்பினார்கள். எனவே தங்கள் இரவு நடவடிக்கைகளை விரிவுபடுத்தினார்கள். வீதிகளின் அருகே குழிகளிலும், ஒழுங்கைகளிலும் பாலங்களின் கீழும் பதுங்கிக்காத்திருந்தார்கள். கூடுதலான புலிகளைப் பிடிக்க வேண்டும் என்ற வெறியே இதற்குக் காரணம். இந்த அணுகுமுறையை அவர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கியமையால், இரவில் நாம் நடமாடுவது கடினமாயிற்று. இராணுவத்தின் எதிர்பாராத இந்த அதிரடி முறை தொடக்கத்தில் அவர்களுக்கு பலனைக் கொடுத்தது. இரவிலே இந்தியப் படையினர் பதுங்கி இருக்கிறார்கள் என்பதே பரவலாகத் தெரியும் வரை, சந்தேகப்படாத பொதுமக்கள் ஒழுங்கைகளில் ஆபத்து இராது என்ற நம்பிக்கையில் இரவிலே நடமாடப் புறப்பட்டு புலிப் போராளிகள் என்ற சந்தேகத்தில் கைதாகி, அடிவாங்கி, அமைதிப் படையினரால் தடுப்புக்காவலிலும் இடப்பட்டார்கள். ஆனால், படையினரின் இந்த இரவு நடவடிக்கை தீவிரம் அடைந்து பலர் கைதாகிய போது வாழ்வா சாவா என்ற போராட்டத்துக்குள் எம்மையும் தள்ளியது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





# கந்தனுக்கு இன்று திருக்கல்யாணம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான முருகப் பெருமானுக்கு இன்று திருக்கல்யாணம். தொல்லை வினை தீர்க்கின்ற நல்லைக் கந்தனுடைய பூங்காவனத் திருவிழாவில் இன்று குதூகலமான திருக்கல்யாண உற்சவம். அதாவது, தேவர் சிறைமீட்ட தேவாதி தேவனை முருகனின் வள்ளி திருமணம் இன்று பூங்காவன உற்சவத்தையொட்டி மிக விமரிசையாக நடைபெறவுள்ளது.

பூமியில் மானுட ஜென்மத்தைப் பெற்ற ஆன்மாக்கள் தங்களுடைய பாவங்களைத் தொலைப்பதற்கு இன்றைய திருக்கல்யாணம் வழி சமைக்கின்றது. அதாவது, கந்தனுடைய பரிபூரண கிருபாகடாட்சம் அடியார்கள் அனைவருக்கும் கிடைக்க ஆவண செய்வது இன்றைய திருக்கல்யாண வைபவமாகும்.



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த திவ்ய மஹோற்சவத்திலே இன்று நடைபெறுகின்ற பூங்காவனத் திருவிழா நிறைவுத் திருவிழாவாகும். அதாவது முருகப் பெருமானுக்கு நிகழ்கின்ற திருக்கல்யாணம் ஓர் ஆனந்த கோலாகலத் திருவிழாவாகும்.

எம் பெருமான் வள்ளியைத் திருமணஞ் செய்த காரணத்தால் முதலில் மணஞ் செய்த தெய்வானையம்மைக்குக் கொஞ்சம் மனஸ்தாபம். விநாயகப் பெருமான் வந்து சுந்தரவல்லி, கனகவல்லி என்ற இரு சகோதரிகளும் கந்தனைக் கைபிடிக்கும் ஆசையால்தவமியற்றினார்களென்றும் அவர்களில் ஒருவரான தெய்வானையம்மையை ஏற்கனவே விவாகஞ் செய்து விட்டமையையும் மற்றவர்தான் வள்ளியம்மையாக மான் வயிற்றில் அவதாரஞ் செய்தார் எனவும் அவரைத் திருமணஞ் செய்யத் தாமே யானையாக வந்து திருவிளையாடல் புரிந்ததார் எனவும் எடுத்துக் கூறியதாக வரலாறு பேசுகின்றது.

இதனை விளக்குகின்ற இன்றைய திருக்கல்யாண வைபவம் நல்லையம்பதியிலே நல்லபடி நிறைவேற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானையும் முருகப் பெருமானையும் தியானித்துக் கும்பிட்டு நிற்கும் அடியார்கள் திருக் கூட்டத்தை அன்பு மீதூரக் காணலாம்.

இன்றைய பூங்காவனத் திருவிழாவிலே மாப்பிள்ளையாக மணவாளக் கோலத்திலே மால் மருகன் முருகனைக் கண்டு தரிசித்துக் களிப்புற நல்லூரை முண்டியடித்துக்கொண்டு முன்னேறும் பக்தர்குழாம் முகங்களில் தான் எத்தனை மகிழ்ச்சி.



கலியுக வரதனான கந்தனின் கலியாணங்காண பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். திருமண வயது வந்தும் அது நிறைவேறாது தவிக்கும் இளசுகள் இன்றைய பூங்காவனக் கல்யாண விழாவைக் கண்டு தரிசித்தால் நிச்சயம் திருமாங்கல்ய தாரணியாகத் தாலி பாக்கியம் கிட்டும் என்பது பூரண நம்பிக்கை.

*''தெய்வத் தமிழ்ச் சுடர்''*
*இராசையா ஸ்ரீதரர்*

# சூரிச் இளஞ்சிறுத்தைகள் அணிக்கு தமிழீழ வெற்றிக் கிண்ணம்!





சுவிஸ் தமிழர் இல்லம் 17 ஆவது தடவையாக நடத்திய தமிழர் விளையாட்டு விழாவில் 11 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட போட்டியில் சூரிச் இளஞ்சிறுத்தைகள்அணி தமிழீழ கிண்ணத்தை சுவீகரித்தது.

இறுதியாட்டத்தில் கொடுக்கப்பட்ட 20 நிமிடங்களில் Tamil sporting அணியுடன் மோதியது இளஞ்சிறுத்தைகள் கொடுக்கப் பட்ட நேரத்தில் இரு அணிகளும் எந்த கோல்களையும் பெறாத நிலையில் பலமாக உதைத்தாடின.

இருப்பினும் வெற்றியைத் தீர்மானிக்கும் வகையில் மேலதிகமாக வழங்கப்பட்ட 05 நிமிடங்களில் ஒரு கோலை அடித்து வெற்றியைச் சுவைத்தது இளஞ் சிறுத்தைகள் அணி.

எதிர்காலத்தில் இளஞ்சிறுத்தைகளுக்கு பலமான உதைத்தாடும் அணி உரு வாகும் என்ற நம்பிக்கையை விதைத்தது மைதானத்தில் களமாடிய வீரர்களின் அபாரமான- ஆட்டம்.

# பேர்ளின் மயூராபதி ஆலய மாம்பழத்திருவிழாவில்...!







ஜேர்மன் பேர்ளின் நகரில் உள்ள மயூராபதி முருகன் ஆலயத்தில் வருடாந்தப் பெருந்திருவிழாவில் மாம்பழத் திருவிழா அண்மையில் நடைபெற்றது. ஈழத் தமிழ்ச் சிறுவர்கள் ஆறுமுகன் சிவனிடம் இருந்து மாம்பழம் பெற்ற கதையை போன்று வேட உடை தரித்து பாவனை மூலம் நிகழ்த்தியமையைப் படங்களில் காணாலாம்.

# மலையக மக்கள் எவரும் ரணிலை மறக்கக்கூடாது!

## கூறுகிறார் அமைச்சர் பழனி திகாம்பரம்





கொழும்பு, ஓக. 22

மலையக மக்கள் எவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மறந்து விடக்கூடாது என அமைச்சர் பழனி திகாம்பரம் கூறியுள்ளார்.

தலவாக்கலை - மடக்கும்புர பகுதியில் நேற்று முன்தினம் சனசமூக நிலையம் மற்றும் மடக்கும்புர தோட்டத்திற்கு செல்லும் புனரமைக்கப்பட்ட வீதி ஆகியன திறந்து வைக்கப்பட்டதுடன், புனரமைக்கப்படவுள்ள வைத்தியசாலை வீதிக்கு அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு சிலர் இந்த அரசு மலையக மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை எனத் தெரிவித்து வருகிறார்கள். ஆனால் இந்த அரசு மலையக மக்களுக்கு நிறையவே செய்துள்ளது.

மலையக மக்களை மதித்து வருவது இந்த அரசே அத்துடன், முதல் முதலாக காணி உறுதிப் பத்திரங்களை பெற்றுக்கொடுத்தது. இதேவேளை, மலையக மக்கள் எவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மறந்து விடக்கூடாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், சிங் பொன்னையா, ஆர்.ராஜாராம், எம்.ராம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# மோட்டார் வாகன இலக்கத் தகடுகளை இணையத்தளத்தில் பார்வையிடலாம்!

கொழும்பு, ஓக. 22

யாழ்.மாவட்டத்தில் இதுவரை காலமும் பொது மக்கள் தாங்கள் விண்ணப்பித்த வாகன இலக்கத் தகடுகள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றமை தொடர்பில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலேயே பார்வையிட்டு வந்தனர்.

இதனை இலகுவாக்கும் முறையில் இணைய சேவை ஊடாக தற்போது யாழ். மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பொது மக்கள் பார்வையிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இச் சேவையை www. jaffna.dist.gov.lk எனும் மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இணையத்தளத் திற்குள் பிரவேசித்து வலது பக்க மூலையில் vehicle number plates ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த நடைமுறையின் மூலம் வீட்டில் இருந்தவாறே தமது வாகன இலக்கத் தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதை அறிந்து கொண்டு திருப்திகரமான அரச சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

# நல்லூரில் 9 அரிவாள்களுக்கு மேல் படுத்து நேர்த்திக்கடன் நிறைவேற்றிய பக்தர்!





யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நிறைவுற்றதைத் தொடர்ந்து நேற்று தீர்த்தத்திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை நோக்கி காவடிகள் அடுத்தடுத்து வந்த வண்ணம் இருந்தன.

பறவை காவடி, தூக்கு காவடி, பால் காவடி, இவ்வாறு பல காவடிகளை இதுவரை நாம் பார்த்திருக்கின்றோம்.

ஆனால் நேற்றைய திருவிழாவில் ஒரு இளைஞன் 9 அரிவாள்களுக்கு மேல் படுத்துக் கொண்டு காவடி எடுத்துள்ளார்.

இதுவரை இவ்வாறான ஒரு நேர்த்திக்கடன் செலுத்துவதையும், அரிவாள்களுக்கு மேல் படுத்து காவடி எடுப்பதையும் பார்த்ததில்லை என பலரும் தெரிவித்தனர்.

நேற்றைய தீர்த்தத் திருவிழாவிலேயே இப்படியான புதுவிதமான பறவை காவடியை காண்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பறவை காவடியை ஆலயத்திற்கு வருகை தந்திருந்த பக்தர்கள் அனைவரும் வியப்புடன் பார்வையிட்டுள்ளனர்.

இந்த பக்தர் வேஷ்டியுடன், 9 அரிவாள்களுக்கு மேல் படுத்துக் கொண்டு பறவைக் காவடி எடுத்து நல்லூரை நோக்கி வருகைதந்துள்ளார்.

# இலங்கையில் முதலீடு செய்ய அமெரிக்கர்கள் தயக்கம்!

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் இடம்பெற்று வரும் ஊழல்கள் மற்றும் அரச நிர்வாக சீரின்மை காரணமாக அமெரிக்காவின் முதலீட்டாளர்கள் தமது நம்பிக்கையை இழந்து வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது இலங்கையின் தேசிய பொருளாதாரம் மற்றும் வர்த்தகம் என்பவற்றுக்கு பெரும் தாக்கத்தை உண்டு பண்ணும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்த விடயம் வெளியாகியுள்ளது.

சுங்கம் மற்றும் குடிவரவுத் துறைகளில் ஊழல்கள், மத்திய வங்கி மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு என்பவற்றில் தேவையற்ற தலையீடுகள் போன்றவை இந்த ஆய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அமெரிக்காவின் இலங்கைக்கான முதலீடுகளில் அதிகரிப்பைக் காண முடியவில்லை.

கடந்த வருடத்தைவிட இந்த வருடத்தின் 6 மாத காலப் பகுதியில் குறைந்தளவான அதிகரிப்பையே காண முடிந்துள்ளது என்று அமெரிக்காவின் வணிகக் கழக பிரதிநிதி ஒருவர் கொழும்பில் வைத்து தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது 17 அமெரிக்க நிறுவனங்கள் செயற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# மின் பாவனைக் கட்டணப் பட்டியல்கள் வழங்கப்படாமையால் கிளி. மக்கள் சிரமம்!

கொழும்பு, ஓக. 22

கடந்த பத்து மாதங்களுக்கு மேல் கிளிநொச்சியில் பல பகுதிகளில் மின் பாவனை வாசிப்புக் கட்டணப் பட்டியல்கள் வழங்கப் படாதமையால் மின் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின்பல்வேறுபகுதிகளிலும் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டு மாதாந்தம் மின் வாசிப்பு கட்டணப் பட்டியல்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்குப் பின்னர் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மின்கட்டணப் பட்டியல்கள் வழங்கப்படவில்லை.

இதனால், மாதாந்தம் குறைந்தளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் பத்து மாதங்களுக்குப் பின்னர் மின் கட்டணப் பட்டியல்களை வழங்கும் போது, அதற்கான கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலை ஏற்படும்.

குறிப்பாக, மாதாந்தம் அனுப்ப வேண்டிய மின் கட்டணத்தை மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது அனுப்பியிருந்தால் அவற்றை ஓரளவு செலுத்தியிருக்க முடியும்.

இவ்வாறு ஒரு வருடம் வரை இந்தப் பட்டியல் அனுப்பாமல் விட்டு ஒரே தடவையில் அனுப்பும் போது அதிகூடிய பணத் தொகையைச் செலுத்த முடியாத நிலை ஏற்படுமென்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மின்சார சபையில் ஏற்பட்ட ஆளணி வெற்றிடத்தால் கட்டளை பட்டியல்களை வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் எதிர்காலத்தில் அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மின்சார சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சரவைப் பொறுப்புக்களை மீறும் எந்த அமைச்சரும் பதவி விலக வேண்டும்!

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22

அமைச்சரவை பொறுப்புக்களை மீறும் எந்த அமைச்சரும் பதவி விலக வேண்டும் என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரான நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தொடர்பிலேயே அவரின் பெயரைக் குறிப்பிடாமல் சரத் அமுனுகம இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக குத்தகை தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானத்தை வெளி மேடைஒன்றில் வைத்து விஜயதாஸ ராஜபக்ஷ விமர்சித்திருந்தார்.

இந்தநிலையில், அவரை பதவி நீக்க வேண்டும் என்று அவரின் சொந்தக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பலரும் கோரி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளராக உள்ள பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, நீதியமைச்சர் விஜயதாஸ பதவி விலகினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதற்கு மத்தியிலேயே ஜனாதிபதியின் விசேட திட்டங்களுக்கான அமைச்சர் சரத் அமுனுகம, விஜயதாஸவின்



பெயரைக் குறிப்பிடாமல் அமைச்சரவைப் பொறுப்பை மீறுவோர் எவர் என்றாலும் பதவி விலக வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir


# அ.தி.மு.க. இரு அணியும் நேற்று ஒன்றிணைந்தன!

## ஆட்சிக்கு - பழனிச்சாமி கட்சிக்கு - ஓ.பி.எஸ்.

## சசிகலா அணி 'அவுட்'





தமிழக அரசியல் வட்டாரத்தில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அ.தி.மு.க. இரு அணிகள் இணைப்பு நேற்றுப் பகல் நடைபெற்றது. அணிகள் இணைப்பை ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

தொண்டர்கள் விருப்பப்படி இரு அணிகளும் இணைந்தன எனவும் இனி தங்களை யாராலும் பிரிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

கட்சியை ஓ.பன்னீர் செல்வமும் ஆட்சியை முதல்வர் பழனிச்சாமியும் வழி நடத்துவர் என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

பொதுக் குழுவைக் கூட்டிக் கட்சி விதிகளில் திருத்தம் கொண்டு வந்து சசிகலாவை கட்சியை விட்டு நீக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நேற்று (திங்கட்கிழமை) காலை முதலே அ.தி.மு.க. தலைமை அலுவலகம், முதல்வர் இல்லம், கிரீன் வேஸ் சாலையில் உள்ள முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். இல்லம், அடையாறில் உள்ள டி.டி.வி. தினகரன் இல்லம், சென்னை மெரினாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடம் ஆகியன பரபரப்பாக இருந்துவந்த நிலையில், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கட்சி அலுவலகத்துக்கு வந்தனர். இருவரும் நேரில் சந்தித்து கை குலுக்கி மகிழ்ச்சியைப் பறிமாறிக் கொண்டனர்.


பின்னர் அணிகள் இணைப்பை ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைந்துள்ள நிலையில், நேற்று மாலை புதிய அமைச்சர்கள் பதவியேற்க விருந்தனர்.

ஓ.பன்னீர்செல்வத்துக்குத் துணை முதல்வர் பதவி வழங்கப்படுகிறது. அவருக்கு நிதி மற்றும் வீட்டு வசதித் துறை என்பன ஒதுக்கப்பட்டுள்ளன. அவரது அணியைச் சேர்ந்த மா.பா. பாண்டியராஜனுக்கு தமிழ் வளர்ச்சித் துறை ஒதுக்கப்பட்டுள்ளது. ஆளுநர் மாளிகை இது தொடர்பாக அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டது.

இணைப்பு நிகழ்ச்சியின்போது அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து சசிகலாவை நீக்குவது குறித்து ஓ.பன்னீர்செல்வமோ, எடப்பாடி பழனிச்சாமியோ ஏதும் பேசவில்லை. (உ)

# ஜெயலலிதாவின் ஆன்மாவே அணிகளை இணைத்ததாம்!



ஒரு தாய் மக்களின் சகோதரர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எங்களை யாராலும் பிரிக்க முடியாது. ஜெயலலிதாவின் ஆன்மாவே அணிகளை இணைத்தது என்று முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். பேசினார்.

அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நேற்று ஓ.பி.எஸ்.அணியினரும், எடப்பாடி பழனிச்சாமி அணி யினரும் வருகை தந்தனர். ஓ.பன்னீர் செல்வமும், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும் கைகுலுக்கிக் கொண்டனர்.

அதற்குப் பிறகு ஓ.பன்னீர்செல்வம் பேசியவை வருமாறு:

''உலக அரசியல் அரங்கில் அ.தி.மு.க. சரித்திர சாதனையை உருவாக்கி உள்ளது. நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள். சிலகருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தாலும், அதையெல்லாம் உதறித் தள்ளி விட்டு எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் கனவுகளை நனவாக்கத் தொண்டர்களின் விருப்பத்துக்கு இணங்க இணைந்திருக்கிறோம்.

ஒரு தாய் மக்களின் சகோதரர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எங்களை யாராலும் பிரிக்க முடியாது. இந்த இணைப்புக்கு உதவிய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூத்த நிர்வாகிகளுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். உங்கள் அனைவரையும் மீண்டும் காண ஜெயலலிதாவின்ஆன்மா வழிவகுத்துள்ளது.

எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் வாழ்நாள் முழுவதும் இயக்கத்துக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்கள். அ.தி.மு. கவின் சாதாரண தொண்டனாக இருந்து கட்சி வளர்ச்சிக்குப் பாடுபடுவேன். இன்றுடன் என் மனப்பாரம் குறைந்து விட் டது''.- என்று ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

# இரு ஊழல் சாம்ராஜ்யங்கள் இணைவு என்கிறார் ஸ்டாலின்!

## இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாம்



மக்கள் பிரச்சினைகள் எதையுமே தெரிந்துகொள்ளாமல் அ.தி.மு.க. அரசு செயற்பட்டு வரும் நிலையில், இந்த ஆட்சி தொடரக் கூடாது என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர் என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் ஸ்டாலின் நேற்று செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

''எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான ஆட்சி, ஊழல் மிகுந்த ஆட்சி என்று சொன்னவர் ஓ.பன்னீர்செல்வம். பன்னீர் முதல்வராக - அமைச்சராக - இருந்தபோது தான் சேகர் ரெட்டியையும், ஊழலையும் அறிமுகப்படுத்தியவர் என்றவர் எடப்பாடி பழனிசாமி. இப்போது இரண்டு ஊழல் சாம்ராஜ்ஜியங்களை நடத்திக் கொண்டிருக்கும் அந்த இருவரும் இணைந்து விட்டனர்.

அதைத்தான் நாங்கள் ஏற்கெனவே, இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று சொன்னோம். அந்த நிலைதான் இன்று இருக்கிறது. இந்தக் கொடுமைகளை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான தீர்ப்பை வரும் காலகட்டத்தில் மக்கள் தெளிவாக வழங்குவார்கள்.

''மக்கள் பிரச்சினைகள் எதையுமே அவர்கள் தெரிந்து கொள்ளாமல் இப்படியெல்லாம் செயற்பட்டு வரும் நிலையில், இந்த ஆட்சி தொடரக் கூடாது என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர். எனவே, சட்ட மன்றத்தைக் கூட்ட வேண்டும் என்ற அவசியமில்லை''- என்று ஸ்டாலின் கூறினார்.

# ஓ.பி.எஸ். துணை முதல்வர்; அமைச்சரவை மீளமைப்பு



அ.தி.மு.க. அணிகள் இணைந்தமையை அடுத்து ஓ.பன்னீர்செல்வம் துணை முதல்வராக பதவியேற்கிறார் என்றும் தமிழக அமைச்சரவையில் மாற்றம்செய்யப்பட்டுள்ளது என்றும் ஆளுநர் மாளிகை அறிவித்தது.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், ''ஓ.பன்னீர் செல்வம்தமிழகத்தின்துணை முதல்வர் ஆகிறார். அவருக்கு நிதி மற்றும் வீட்டு வசதித் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதித்துறை ஓ.பன்னீர் செல்வத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் அமைச்சர் ஜெயக்குமார் மீன்வளத்துறையை மட்டும் கவனிப்பார்.

வீட்டு வசதித்துறை அமைச்சராக இருந்த உடுமலை ராதாகிருஷ்ணன் கால்நடைத்துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கால்நடைத்துறை அமைச்சராக இருந்த பாலகிருஷ்ண ரெட்டிக்கு இளைஞர் நலன் மேம்பாடு, விளையாட்டுத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இளைஞர் நலன் மேம்பாடு, விளையாட்டுத் துறையை செங்கோட்டையன் கவனித்து வந்தார். இனி அவர் பள்ளிக் கல்வித் துறையை மட்டும்கவனிப்பார்.

சேவூர் ராமச்சந்திரனிடம் இருந்த தொல்லியல், தமிழ் வளர்ச்சித்துறை மாபா பாண்டியராஜனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சேவூர் ராமச்சந்திரன் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சராகத் தொடர்வார்.

சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு எம்.சி. சம்பத்திடம் இருந்த சுரங்கம் மற்றும் கனிமவளம் துறை கூடுதலாகவழங்கப்படுகிறது. எம்.சி.சம்பத் தொழில்துறை அமைச்சராக தொடர்வார்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு விழா நேற்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. (உ)

# அமெரிக்கப் போர்க் கப்பலுடன் சரக்குக் கப்பல் மோதி விபத்து!

கோலாலம்பூர், ஓக. 22

சிங்கப்பூர் கடல் பிராந்தியத்தில் பயணித்துக் கொண்டிருந்த அமெரிக்க போர்க் கப்பல் ஒன்று, லிபியாவிற்குச் சொந்தமான சரக்குக் கப்பலுடன் மோதி விபத்திற்குள்ளானதில் 10 அமெரிக்க கடற்படையினர் காணாமல் போயுள்ளனர் என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.



அமெரிக்காவின் ஜோன் மெக்கெயின் என்ற நாசகாரி போர்க்கப்பலொன்று சிங்கப்பூர் கடல் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தது.

இந்தப் போர்க்கப்பல் மிகவும் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டதுடன் அந்தக் கப்பலில் அதிக சக்தி வாய்ந்த ரேடார் கருவிகள் உள்ளன.

சிங்கப்பூர் கடல் பகுதியில் மலாக்காதீவுக்கு அருகில் பணித்துக்கொண்டிருந்த அமெரிக்க போர்க்கப்பல், லிபியாவை சேர்ந்த அல்னிக் என்ற சரக்குக் கப்பலுடன் திடீரென மோதியது. இச்சம்பவத்தில் அமெரிக்க கப்பலில் இருந்த 10 கடற்படையினர் காணாமல் போயுள்ளனர் என அமெரிக்க கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் அமெரிக்க போர்க் கப்பல் கடும் சேதம் அடைந்துள்ளது.

சரக்கு கப்பல் அமெரிக்க கப்பலைவிட அதிக எடையுடன் இருந்ததால், அமெரிக்க கப்பலுக்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் இந்த சரக்குக் கப்பலில் 30 ஆயிரம் தொன் சரக்குகள் ஏற்றப்பட்டிருந்தன எனவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த கப்பல் விபத்தில், அமெரிக்க போர்க் கப்பலில் பயணம் செய்த 10




கடற்படை வீரர்கள் காணாமல் போயுள்ளனர் எனவும் மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர்களை ஹெலிக்கொப்டர் மூலம் மீட்டு சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

மாயமான வீரர்களைத் தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என அமெரிக்க கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுவிஸ் விமான விபத்தில் மூன்று பேர் உயிரிழப்பு!

சுவிட்சர்லாந்து நாட்டில் சிறிய ரக பயிற்சி விமானம் ஒன்று தரையில் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் பலியாகியுள்ளனர் என அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

சுவிஸின் வாலைஸ் மாகாண தலைநகரான சியோன் நகரில் இருந்து சிறிய ரக பயிற்சி விமானம் ஒன்று நேற்று முன்தினம்பிற்பகல்ஒருமணியளவில் புறப்பட்டுள்ளது.

விமானம் புறப்பட்ட போது வானம் சீராக இருந்தாலும், காற்று பலமாக வீசியதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், பறந்துக் கொண்டு இருந்த விமானம் எதிர்பாராத விதமாக Sanetsch Pass என்ற இடத்தில் விழுந்து நொருங்கியுள்ளது.

விமானம் விழுந்ததும் தீப்பற்றி எரிந்ததால் அதில் பயணம் செய்த 3 பேரும் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

எனினும், உயிரிழந்தவர்கள் தொடர்பாகத் தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில் விமான விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

சமீப நாள்களாக சுவிஸில் சிறிய விமான விபத்துக்கள் அதிகளவில் நிகழ்ந்துள்ளன. கடந்த வாரத்தில் Graubunden மாகாணத்தில் பயிற்சி விமானம் கீழே விழுந்துநொருங்கியதில் 3 பேர் பலியானார்கள்.

கடந்த செவ்வாய்க் கிழமை அன்று காண்ட்ஸ்டான் ஏரிக்கு அருகில் சிறிய விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் பலியானார்கள்.

இந்த ஒரே மாதத்தில் அடுத்தடுத்து நிகழ்ந்த பயிற்சி விமானவிபத்துக்களில் 8 பேர் உயிரிழந்துள்ளமை பொலிஸாரை அதிர்ச்சியில்ஆழ்த்தியுள்ளது.

## இரு முறை திருமண கொண்டாட்டம்: இளவரசர் ஹரியின் புதிய திட்டம்!

இளவரசர் ஹரி மற்றும் மேகன் திருமண நிகழ்வை பிரித்தானியா மற்றும் அமெரிக்கா என இரண்டு இடங்களில் இருமுறை நடத்த திட்டமிட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானிய இளவரசர்ஹரியும், அமெரிக்க நடிகை மேகனும் கடந்த ஒரு வருடமாக தீவிரமாக காதலித்து வருகிறார்கள்.

தனது திருமணம் குறித்த அறிவிப்பை ஹரி எப்போது வேண்டுமானாலும் வெளியிடலாம் என எதிர்பார்ப்பு நிலவுகிறது.





இந்நிலையில், பிரபல Woman's Day பத்திரிகை ஹரியின் திருமணம் குறித்த சில சுவாரசிய தகவலை வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவில் மிகவும் ஆடம்பரமாகவும், பிரம்மாண்டமாகவும் ஹரி- மேகன் திருமணம் நடைபெறவுள்ளது என்றும், மணமக்களின் உறவினர்கள் அதிகளவில் கலந்துகொள்ள இருக்கின்றனர் எனவும் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கடுத்து அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் மீண்டும் இருவரும் திருமண நிகழ்வை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இதில் டென்னீஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், இந்திய நடிகை பிரியங்கா சோப்ரா, பிரபல பாடகியும் ஹரியின் தோழியுமான Ellie Goulding ஆகியோர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பழைமைவாதிகளின் கடும் எதிர்ப்புகளை மீறி இசைக்கச்சேரி நடத்திய பெண் கலைஞர்!

காபூல், ஓக. 22

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பிரபல பெண் இசைக்கலைஞர் அர்யானா சயீத் பழைமை வாதிகளின் கடும் எதிர்ப்புகளை மீறி காபூல் நகரில் கச்சேரி நடத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் நாடானது தலிபான்களின் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர் தற்போது அங்கு பெண் சுதந்திரம், உரிமைகளுக்கான குரல்கள் ஓங்கி ஒலித்து வருகின்றது. அந்நாட்டைச் சேர்ந்த பெண் இசைக்கலைஞர் அர்யானா சயீத் சுதந்திர தினத்தை முன்னிட்டு காபூல் நகரில் கச்சேரி நடத்த முடிவு செய்திருந்தார்.

அர்யானாவின் கச்சேரிக்கு பழைமைவாதிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்தது. மேலும், காபூல் நகரில் சமீபகாலமாக தொடர் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாலும், அவரது கச்சேரியை தள்ளி வைக்குமாறு பொலிஸாரும் கூறியிருந்தனர். ஆனால், எதிர்ப்புகளை புறந்தள்ளி அர்யானா காபூல் நகரில் உள்ள ஒரு நட்சத்திர விடுதியில் தனது கச்சேரியை நிகழ்த்தி அனைவரையும் ஆச்சரியப்படுத்தி உள்ளார்.

## அமெரிக்கா, தென்கொரியா கூட்டு போர்ப் பயிற்சி

பியாங்யாங், ஓக. 22

கொரிய தீபகற்ப பகுதியில் அமெரிக்காவும், தென் கொரியாவும் நேற்று நடத்திய கூட்டு போர்ப்பயிற்சிக்கு வடகொரியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் இடையேயான பனிப்போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. தன் மீது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் புதிய பொருளாதார தடை விதிக்கக் காரணமான அமெரிக்காவின் குவாம் தீவின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா அதிரடியாக அறிவித்தது.




அதற்கு பதிலடி கொடுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அந்த நாட்டின் மீதான பிரச்சினையில் இராணுவ தீர்வு காண்பதற்கு போர்த் தளவாடங்களையும், ஆயுதங்களையும் ஏற்றியாகி விட்டது, வடகொரியா தனது பாதையை மாற்றிக்கொள்ளா விட்டால் தாக்குதல் நடத்தப்படும் என எச்சரித்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவும், தென்கொரியாவும் ஆண்டுதோறும் நடத்துகிற கூட்டு போர்ப் பயிற்சி கொரிய தீபகற்பப் பகுதியில் நேற்று தொடங்கியது.

இது தொடர்ந்து 10 நாள்கள் நடக்கிறது. இந்த கூட்டு போர்ப்பயிற்சி, வடகொரியாவுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது பற்றி, வடகொரிய அரசின் செய்தித்தாள் ‘ரோடாங் சின்முன்’ நேற்று முன்தினம் வெளியிட்ட செய்தியில், வர இருக்கிற அமெரிக்க, தென் கொரிய கூட்டு இராணுவப் பயிற்சி பொறுப்பற்றது.

ஓர் அணு ஆயுதப் போரின் கட்டுப்பாடற்ற கட்டத்தில் நிலைமையைக் கொண்டு செல்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், எங்கள் படை எந்த நேரத்திலும் அமெரிக்காவை தாக்குதல் இலக்காகக்கொள்ளும். குவாம், ஹவாய் அல்லது அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதியில் இரக்கமற்ற தாக்குதல் நடத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்தியாவின் அபார வெற்றிக்கு அடிப்படையான 5 காரணங்கள்





தம்புள்ளை மைதானத்தில் இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இந்தியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 3-0 என்று வென்ற இந்தியா, முதல் ஒரு நாள் போட்டியில் அபார வெற்றி பெற்றுள்ள நிலையில், அது குறித்த 5 முக்கிய காரணங்களை இங்கே காணலாம்.

### தொடரும் டெஸ்ட் தொடரின் பாதிப்பு

3 டெஸ்ட் போட்டிகளை சிறப்பாக வென்றிருந்த இந்திய அணி, முதல் ஒருநாள் போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அபார வெற்றி பெற்றுள்ளது.

முதல்முறையாக இலங்கை மண்ணில் 3-0 என்று டெஸ்ட் தொடரை வெள்ளையடித்த இந்திய அணிக்கு, டெஸ்ட் தொடரின் மகத்தான வெற்றி ஒருநாள் போட்டித் தொடரை நம்பிக்கையுடன் தொடங்க உதவியது.

டெஸ்ட் தொடரை மிக மோசமாக தோற்றதால் அது இலங்கை அணியின் ஞாயிறு ஆட்டத்தில் பிரதிபலித்தது.

### தொடக்கத்தை பயன்படுத்த தவறிய இலங்கை

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட் இழப்பின்றி 14 ஓவர்களில் 74 ஓட்டங்கள் சேர்த்து வலுவான நிலையில் இருந்தனர்.

இலங்கை அணியின்





தொடக்க வீரர்கள் டிக்வெல்ல மற்றும் குணதிலக ஆகியோர் நன்கு அடித்தாடி அணிக்கு வலுவான தொடக்கத்தை அமைத்துத் தந்த போதிலும், பின்னர் களமிறங்கிய வீரர்களில் மெண்டிஸ் மற்றும் அணித் தலைவர் மத்தியூஸ் ஆகியோரைத் தவிர யாரும் சிறப்பாக விளையாடவில்லை.

மேலும், 43.2 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த இலங்கை 216 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

### தவான், கோஹ்லி அதிரடி

217 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி, தொடக்க வீரர் ரோகித் சர்மாவை சொற்ப ஓட்டங்களில் இழந்தாலும், தவான் மற்றும் கோஹ்லியின் சிறப்பான ஆட்டத்தால் மாபெரும் வெற்றி பெற்றது.

ஷிகர் தவான் மிகவும் சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தார்.

ஷிகர் தவான் 3 சிக்ஸர்கள், 20 பவுண்டரிகள் விளாசி 90 பந்துகளில் 132 ஓட்டங்களைக் குவித்தார். அதேபோல விராட் கோஹ்லி 70 பந்துகளில் 82 ஓட்டங்களை விளாசினார்.



இவ்விருவரின் அதிரடி ஆட்டத்தால், 28.5 ஓவர்களில் இந்தியா வெற்றி இலக்கை எட்டியது.

### சிறப்பாக பந்துவீசிய இந்திய பந்து வீச்சாளர்கள்

முதல் ஒருநாள் போட்டியை இந்தியா எளிதாக வெல்ல முடிந்ததற்கு முக்கிய காரணம் இந்திய பந்துவீச்சாளர்கள்தான்.

இந்திய அணியின் சார்பில் அக்சர் பட்டேல் 10 ஓவரில் 34 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும், கேதர் ஜாதவ், சாஹல் மற்றும் பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

அக்சர் பட்டேல் மற்றும் பும்ரா ஆகிய இரு பந்துவீச்சாளர்களும் சிக்கனமாக பந்து வீசியமையால் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் விரைவாக ஓட்டங்களையும் குவிக்கப் பெரிதும் தடுமாறினர்.

### சோபிக்க தவறிய பந்துவீச்சாளர்கள்

ஆறு பந்துவீச்சாளர்களை இலங்கை அணி பந்துவீச்சில் அமர்த்தியபோதும் அவர்களால் ஒரு விக்கெட்டை மட்டுமே பெற முடிந்தது.

இலங்கை அணியின் அனுபவம் மிகுந்த வேகப்பந்து வீச்சாளரான மலிங்க, தான் பந்து வீசிய 8 ஓவர்களில் 52 ஓட்டங்களை வழங்கினார். இதே போல், மற்ற பந்துவீச்சாளர்களாலும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களிடம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

---

# டோனிக்கு 'அக்னி பரீட்சை'

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடர், டோனியின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடியதாக அமையும்.

இந்திய அணி முன்னாள் அணித் தலைவர் டோனி, வயது 36. கடைசி 2 ஓவரில், 30 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமா, கடைசி பந்தில் சிக்ஸர் அடிக்க வேண்டுமா, எதுவாக இருந்தாலும், இவர் களத்தில் இருந்தால் சாதித்து விடுவார்.

ஆனால், திடீரென இந்த 'மேஜிக்' காணாமற்போனது. விக்கெட் காப்பில் மட்டும் சிறப்பாக உள்ளது.

### காரணம் இதுவா?

கடந்த ஐ.பி.எல்., தொடரில் புனே அணிக்காக பெரியளவில் பிரகா



சிக்கவில்லை. 16 போட்டியில் 290 ஓட்டங்கள் தான் எடுத்தார். பின் நடந்த சம்பியன்ஸ் கிண்ண (63, 4 ஓட்டங்கள்), மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் (9, 13, 78, 54 ஓட்டங்கள்) சூழ்நிலைக்கு தகுந்து செயற்படவில்லை.

### தொலைந்த திறமை

இவரது 'ஹெலிக்கொப்டர் 'ஷொட்டை' காண முடியவில்லை. 'பினிஷிங்' திறன் மங்கியது. இதனால், டோனி குறித்து சில தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என குரல் ஒலிக்கத் தொடங்கியது. இவர் 2019 உலக கோப்பை தொடர் வரை நீடிக்க முடியுமா என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

### மீள முடியும்

தனது கிரிக்கெட் வாழ்க்கையில் முதன் முறையாக ஒருவித நெருக்கடியுடன் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் களமிறங்குகிறார் டோனி. சம்பியன் வீரரான இவருக்கு எப்படி மீண்டு வர வேண்டும் என, நன்றாகத் தெரியும்.

தனது எதிர்காலம் குறித்து வேறு யாரும் முடிவு செய்ய அனுமதிக்க மாட்டார். ஆஸ்திரேலிய தொடரில் (2014) டெஸ்ட் அணித் தலைவர் பதவியைத் துறந்தார். ஒருநாள், 'டுவெண்ரி-20' அணித் தலைவர் பொறுப்பில் இருந்து சரியான நேரத்தில் விடைபெற்றார்.

எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என, டோனிக்கு நன்றாகத் தெரியும். யாரையும் கேட்கமாட்டார், தானாக விலகிப் போய்விடுவார்.

இதனால், இலங்கை தொடரில் டோனி எப்படி விளையாடுவார், என்ன செய்யப் போகிறார் என, பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2015 இல் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடருக்குப் பின் டோனி களமிறங்கிய 19 ஒருநாள் போட்டிகளில் 664 ஓட்டங்கள் தான் எடுத்தார்.

இதில் பவுண்டரி, சிக்ஸர் சதவீதத்தை பார்த்தால், மற்ற 'முன்னணி' இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாக (8.05) உள்ளது. (உ)

# கடைசியில் கடை நடத்தி காலம் தள்ளும் உபுல் சந்தன!

சினிமா, விளையாட்டு, அரசியல் போன்றவை, ஒரு சூதாட்டமே! ஒருவரை எப்போது மேலே தூக்கிச் செல்லும், எப்போது அதல பாதாளத்துக்குள் தள்ளும் என்பது தெரியாது.

ஒருசிறியதவறு, இலங்கை சுழற்பந்து வீச்சாளர் உபுல் சந்தனவின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டு விட்டது. இலங்கை கிரிக்கெட் அணியின், சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், சுழற்பந்து வீச்சில் கலக்கிக்கொண்டிருந்தபோது, அவருக்கு இணையாக பந்து வீசக் கூடிய அளவுக்கும், துடுப்பாட்டத்திலும் கலந்து வந்தவர், உபுல் சந்தனா.

1994 இல் இலங்கைக்காக, தனது முதல் ஒரு நாள் போட்டியில் களமிறங்கினார். 2007 வரை அவர் இலங்கைக்காக விளையாடியுள்ளார். மொத்தம், 147 ஒருதினப் போட்டிகள், 16 டெஸ்ட்போட்டிகளில் விளையாடியுள்ளார்.

சிறந்த பந்து வீச்சாளர் ஒரு நாள் போட்டிகளில் 151விக்கெட்டுகளும், டெஸ்ட் போட்டிகளில் 37 விக்கெட்களும் வீழ்த்தியுள்ளார். துடுப்பாட்டத்தில், 9 ஆவது நபராக இறங்கியபோதும், 72.99 சராசரியுடன், ஒரு நாள் போட்டிகளில், 1,627 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

சிறு தவறால் புரண்டு போனது வாழ்க்கை தற்போது, 44 வயதாகும் உபுல் சந்தன, 2004 இல் செய்த ஒருசிறு தவறு, அவருடைய வாழ்க்கையையே மாற்றி விட்டது. முன்னாள் பல்துறை வீரர்கபில்தேவ் உருவாக்கிய, ஐ.சி.எல். எனப்படும் இந்தியன் கிரிக்கெட் லீக் போட்டிகளில், றோயல் பெங்கால் டைகர்ஸ் அணிக்காக, 2007 இல் விளையாடினார்.

**தடை விதித்த கிரிக்கெட் சபை**

ஐ.சி.எல்.இற்க்கு சர்வதேச கிரிக்கெட் சங்கம், இந்திய கிரிக்கெட் சங்கம் போன்றவை அங்கீகாரம் அளிக்கவில்லை. அதில் விளையாடியதால், சந்தனவுக்கு இலங்கை கிரிக்கெட் சங்கம் தடை விதித்தது.

**வாழ்க்கைக்காக கடை**

அதனால், கிரிக்கெட்டில் ஜொலிக்க முடியாததால், வேறு ஜோலியும் கிடைக்காததால், தனக்கு தெரிந்த கிரிக்கெட் தொடர்புடைய, கிரிக்கெட் பொருள்களை வைக்கும் கடையை நடத்தி வருகிறார். அதுதான், அவருடைய குடும்பத்துக்குச் சோறு போட்டு வருகிறது.



## 71 பந்துகளில் சதம் அடித்த தவானுக்கு கோஹ்லி பாராட்டு

71 பந்துகளில் சதம் அடித்து இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்த தவானுக்கு அணித்தலைவர் விராட் கோஹ்லி பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கு எதிராக தம்புள்ளயில் நடைபெற்ற முதல் ஒரு நாள் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தவான் 71 பந்துகளில் சதம் அடித்து அதிரடி முத்திரை பதித்தார். ஒரு நாள்போட்டியில் அவரது அதிவேக சதம் இது வாகும்.

இந்த வெற்றி குறித்து இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

கடந்த 3 மாதங்களாக தவான் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடி வருகிறார்.

போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்று கடைசி வரை களத்தில் நிற்பது முக்கியமானது. அந்தப் பணியைத் தான் தவான் செய்தார்.

சகல துறை வல்லுநர் என்ற முறையில் அக்‌ஷர் பட்டேலுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அவரது பந்து வீச்சு மிகவும் நேர்த்தியாக இருந்தது.

2019 உலக கோப்பையைக் கருத்தில் கொண்டு அணியில் ஏராளமான மாற்றங்கள் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் 24 மாதங்கள் இருந்தாலும் முன்னதாகவே அணியைத் தயார்படுத்த திட்டமிட்டுள்ளோம். சோதனை முறையில் மாற்றங்களை செய்து பார்க்கலாம்.- இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## யுவராஜ், ரெய்னா நீக்கம்: உடல் தகுதியின்மை காரணம்!



ரெய்னா மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் உடற்தகுதி தேர்வில் தோல்வி அடைந்தமையை அடுத்தே இந்திய அணியில் சேர்க்கப்படவில்லை என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இந்திய அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரில் வெற்றிபெற்ற இந்திய அணி அடுத்து 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரையும் வெற்றியுடன் ஆரம்பித்தார்கள். ஒருநாள் மற்றும் ரி 20 போட்டிக்கான இந்திய அணியின் வீரர்கள் பட்டியல் வெளியானது.

இதில் யுவராஜ் சிங் இடம் பெறவில்லை. யுவராஜ் சிங்கிற்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது என்றும் யுவராஜ் சிங் இனி இந்திய அணியில் இடம்பிடிப்பது கஷ்டம் என்றும் சில செய்திகள் வெளியாகின.

ரெய்னா மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் இந்திய அணி விளையாடிய போதும் அணியில் இடம்பெறவில்லை. தற்போது இலங்கை அணியுடனான போட்டிக்கும் இந்திய அணியில் இடம்பெறவில்லை. இதனால் அவரது ரசிகர்கள் பெரும் கவலையில் உள்ளனர்.

இந்நிலையில் யுவராஜ் சிங் மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோர் இந்திய அணியில் இடம்பெறாதமை குறித்த காரணம் வெளியாகியுள்ளது. டில்லியில் உள்ள தேசிய கிரிக்கெட் பயிற்சி மையத்தில் இருவருக்கும் யோயோ என்ற உடற்தகுதி சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதில் அவர்கள் தோல்வி அடைந்தமையால் இந்திய அணியில் சேர்க்கப்படவில்லை.

## கோஹ்லிக்குள்ளும் ஓர் ஆஸ்திரேலியர் உள்ளார்
### — மைக்கல் கிளார்க் கூறுகிறார்



விராட் கோஹ்லியின் உத்வேகமும், அணுகுமுறையும் அவருக்குள் ஓர் ஆஸ்திரேலியர் இருப்பதையே காட்டுகிறது என மைக்கேல் கிளார்க் கூறியுள்ளார்.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய அணி டெஸ்ட் தொடர் முடிவடைந்து ஒருநாள் போட்டி தொடரை ஆரம்பித்துள்ளது.

இதையடுத்து ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட உள்ளது. இந்தியாவுடன் விளையாடும் ஆஸ்திரேலிய அணியின் வீரர்கள் பட்டியல் வெளியாகியுள்ளது.

இலங்கை தொடர் முடிந்த பின் இந்திய அணியின் வீரர்கள் பட்டியல் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்நிலையில், ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவன் மைக்கேல் கிளார்க் அளித்த பேட்டி ஒன்றில் விராட் கோஹ்லி ஓர் ஆஸ்திரேலியர் எனக் கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

ஆஸ்திரேலியாவில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லிக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். அவர் களத்தில் மிக கடினமாக உழைத்து சவால் கொடுக்கிறார். அவரைப் பற்றி அறிந்தவர்கள், அவர் களத்தில் எந்த அளவுக்கு போராட்ட குணத்தை வெளிப்படுத்துகிறார் என்பதை உணர்ந்து இருப்பார்கள். இதே குணம்தான் ஒவ்வொரு ஆஸ்திரேலிய வீரர்களிடமும் உண்டு.

ஆஸ்திரேலியர்களிடம் காணப்படும் உத்வேகமும், அணுகுமுறையும் விராட் கோஹ்லியிடம் நிறைய இருக்கின்றன. சொல்லப் போனால் விராட் கோஹ்லிக்குள் ஓர் ஆஸ்திரேலியர் இருக்கிறார்.- என்றார். (உ)

## ரெலோவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்கின்றார்கள் என்ற போர்வையில் எனது அமைச்சுப் பொறுப்பை கபடத்தனமாகவும் சூட்சுமமாகவும் தட்டிப் பறிக்க நினைக்கின்றார்கள். அந்தவகையில் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நானும் நகரவேண்டி உள்ளது. கட்சியின் அடிப்படை உறுப்புரிமை இல்லாத ஒரு நபரை ஆறு மாதங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தங்களுடைய கட்சியின் யாப்பில் இடம் இருக்கின்றதா? அத்தோடு கட்சியின் அடிப்படை உறுப்புரிமை பெற்ற நபரென்று கூறுவீர்கள் என்று சொன்னால், அத்தகைய உறுப்புரிமையானது எங்கு, எப்போது, எவ்வாறு, உறுப்புரிமை எனக்கு வழங்கப்பட்டது என்பதை தங்களால் எனக்கும் எமது மக்களுக்கும் ஆதாரத்துடன் தெளிவுபடுத்த முடியுமா? இக்கேள்வியைப் பகிரங்கமாக ரெலோ கட்சிக்கு விடுக்கின்றேன்.

மேலும் 2013 ஆம் ஆண்டு வடமாகாண சபை தேர்தலின் போது தங்களின் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் நான் போட்டியிட்டேன் என்பதை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்கிறேன். அதனை மக்களும் நன் கறிவார்கள். அந்த வகையில் தேர்தலின் பின்னர் அன்றிலிருந்து இன்று வரை தங்களுடைய கட்சிக்கு விசுவாசமாகவும் அடிப்படைத் தொண்டன் என்ற வகையிலும் செயற்பட்டு வருவதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள் என நம்புகின்றேன்.

கட்சியும் கட்சியின் செயலாளர் நாயகமும் பலதடவைகள் தங்களுடைய கூட்டங்களுக்கு நான் வருவதில்லை என்றும் ஏறக்குறைய 21 கூட்டங்களில் ஒரு கூட்டத்திற்கே வந்துள்ளேன் எனவும் வெளிப்படையாகவே குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இவ்வாறு தங்களுடைய கூட்டத்திற்கு வராமல் இருப்பதற்கான பல காரணங்கள் இருக்கின் றன. குறிப்பாக மாகாணசபை உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் முதல்முதலில் தங்கள் கட்சியினால் மன்னார் மாவட்டத்தில் கூட்டம் ஒழுங்குசெய்து நடத்தப்பட்டது. அவர் கூட்டமே எனக்கும் ரெலோ கட்சிக்குமிடையில் நடைபெற்ற முதலாவது கூட்டமாகும், அக்கூட்டத்தில் பலஏற்றுக்கொள்ளமுடியாத காரணங்களைத் தாங்கள் முன்வைத்தபோது அதற்கு எதிராக தனியொரு மனிதனாக குரல் கொடுத்து தங்களின் நிலைப்பாடு பிழைஎன்பதைஅன்றையதினமே தெளிவாக சுட்டிக்காட்டி இருந்தேன். அதற்குப் பின்னர் நடைபெற்ற 20 கூட்டங்களுக்கும் நான் சமுகமளிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் ஏன், எதற்காக வரவில்லை என்ற காரணம் எனக்கும் தங்களுக்குமே தெரிந்த பக்கம் 03 »

## 4 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை மறுசீராக்கம் தொடர்பில் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் நேற்றுக் காலையில் மின்னஞ்சல் செய்தி ஒன்றை ஆளுநருக்கு அனுப்பிவைத்தார் என அறிய வருகின்றது.

அந்த மின்னஞ்சலிலேயே சுகாதாரத் துறையை மருத்துவர் குணசீலனுக்கு வழங்கும் தமது முடிவை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். பக்கம் 03 »

## அட்மிரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று அப்பதவியை அவர் ஏற்றுக் கொள்வார்.

இதுவரை பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாகக் கடமையாற்றிய ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவுக்கு வழங்கப்பட்டி ருந்த சேவைநீடிப்புக்காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இதையடுத்து இன்று பாதுகாப்பு அதிகாரிகளின் புதிய பிரதானியாக ரவீந்திர விஜேகுணவர்த்தன பதவியேற்கவுள்ளார்.

## மல்லாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் முறையீட்டாளராக உள்ள இந்தப் பதிவாளர் நேற்று வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்கத் தவறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு பிடியாணை வழங்கி பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

அலைபேசி ஒன்றின் ஊடாக தன்னுடைய உத்தியோகபூர்வ தொலைபேசியில் இந்த சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் தன்னை அச்சுறுத்தினார் என மல்லாகம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் ஆனந்தராசா நந்தினிதேவி செய்த முறைப்பாட்டின் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சட்டத்தரணி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த தவணை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட சட்டத்தரணி குற்றச்சாட்டை மறுத்தமையை அடுத்து, வழக்கு விசாரணை நேற்றைய தினத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருந்தது.

நேற்று இவ்வழக்கு பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, வழக்கின் முதலாம் சாட்சியான நீதிமன்ற பதிவாளர் நந்தினிதேவி சமுகமளித்திருக்கவில்லை.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், மேற்படி சாட்சிக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை கையளிக்கப்பட்டதாஎன்றுகேள்வி எழுப்பினார்.

தெல்லிப்பழை பொலிஸாரின் சார்பில் ஆஜராகி இருந்த பொலிஸ் சார்ஜண்ட் பாலித, அழைப்புக் கட்டளை சாட்சியிடம் நேரில் கையளிக்கப்பட்டதாகவும், அது தொடர்பான அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிவானிடம் தெரிவித்தார்.

அழைப்புக் கட்டளை கையளிக் கப்பட்டும் சம்பந்தப்பட்ட சாட்சி சமுக மளிக்காதமையால் அவருக்கு எதிராகப் பிடியாணைக்கு உத்தரவிடுமாறு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றைக் கோரினார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பதில் நீதிவான் சம்பந்தப்பட்ட சாட்சியான நீதிமன்றப் பதிவாளருக்கு எதிராக பிடியாணைக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு அனுசரணையாக சட்டத்தரணிகள் கே.எஸ். பால கிருஷ்ணன், கே.சயந்தன் ஆகி யோரும் ஆஜராகியிருந்தனர்.

## ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஆற்றுப்படுத்துவதற்கு வழி வகுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச சமூகமோ பாதிக்கப்பட்டவர்களோ வேறு எதனையும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விஜயதாஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு அரசியல் உயர்மட்ட தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன.

நேற்று முன்னிரவில் அலரி மாளிகையில் பிரதமரை சந்தித்த ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு மற்றும் கட்சி நிறைவேற்று உறுப்பினர்கள் குழு விஜேதாஸ ராஜபக்ஷவை அமைச்சுப்பதவியில் இருந்து நீக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் தான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வார் எனப் பிரதமர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியுள்ளார் எனத் தெரிவித்தே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்மொழியப்பட்டிருக்கிறது. (உ)

## டெனீஸை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் முழுவிவரம் வருமாறு–

எமது கட்சியின் தலை மைக் குழுவினால் ஞாயிறன்று எடுக்கப்பட்டுள்ள முடிவின் பிரகாரம் நான் இக்கடிதத்தை தங்களுக்கு எழுதுகின்றேன்.

வடமாகாண முதலமைச்சர் மீது நம்பிக்கை இழந்துவிட்டதாகத் தெரிவித்து, வடமாகாண ஆளுநரிடம் சமீபத்தில் கையளிக்கப்பட்ட பிரேரணையில், வேறு சில வடமாகாண சபை உறுப்பினர்களோடு இணைந்து, எமது கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பா.டெனீஸ்வரனும் கையெழுத்திட்டதன் மூலம், அவர் அங்கம் வகிக்கும் எமது கட்சியின் அங்கீகாரம் இல்லாமல் தன்னிச்சையாகவும், நன்கறியப்பட்ட எமது கட்சியின் நிலைப்பாட்டிற்கு புறம்பாகவும், மாறாகவும் செயற்பட்டுள்ளார் என்பதால், அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தலைமைக் குழுவினால் நேற்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தின் பிரகாரம் 20.08.2017 ஆம் திகதியில் இருந்து – அதாவது நேற்றைய தினத்தில் இருந்து – எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு எமது கட்சியிலிருந்து பா.டெனீஸ்வரன் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதையும், குறித்த ஆறுமாத காலத்தில் அவரது அரசியல் நடவடிக்கைகள் கட்சியினால் அவதானிக்கப்பட்டு, அக்கால முடிவில் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தமான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

ஆகவே டெனீஸ்வரனை அமைச்சரவையில் இருந்து நீக்கும் நடவடிக்கையை விரைவாக முன்னெடுக்குமாறும், அவருக்குப் பதிலாக எமது கட்சியின் சார்பில் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டுள்ள விந்தன் கனகரத்தினத்தை நியமிக்குமாறும், தங்களை வேண்டிக் கொள்ளுமாறு தலைமைக் குழுவினால் நான் மேலும் பணிக்கப்பட்டுள்ளேன் என்பதையும் அறியத்தருகின்றேன். – என்று உள்ளது. (உ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சபையின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளமாட்டார் என நம்பகரமாக அறியவந்தது.

“அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் முதல்வரின் தற்றுணிவுக்குரிய விடயமாகும். அதில் சபை உறுப்பினர்கள் தலையிடுவது பொருத்தமானதல்ல. ஆகையினால், அத்தகைய பிரேரணை ஒன்றை சபையில் விவாதத்துக்கு எடுக்க அனுமதிக்க முடியாது.” – என்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கருதுகின்றார் எனத் தெரியவந்தது. (உ)

## பழைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைமறுதினம் நடைபெறும் வடக்கு மாகாண சபையின் அமர்வின்போது ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்குமாறு கோரி நேற்று மாகாண சபையின் அவைத் தலைவருக்கு இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த பிரேரணையின் முழுவடிவம் வருமாறு:–

தற்போதைய அமைச்சரவை நிலையில் இரு அமைச்சர்கள் (கல்வி, விவசாயம்) அமைச்சர் பதவிகளை முதலமைச்சரின் வேண்டுதலின் பேரில் தியாகம் செய்து விட்டனர். அவர்களின் இடத்திற்கு இருவர் மூன்று மாத காலத்திற்கென அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய இரு அமைச்சர்களையும் மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனத் தகவல்கள் வெளி வருகின்றன. ஒட்டு மொத்தமாக நான்கு அமைச்சர்களும் புதிய அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர். இந்நியமனங்களில் முதலமைச்சர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார் என அறிகின்றேன்.

எமது மாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் எஞ்சியிருப்பது ஒரு வருடமும், ஒரு மாதமுமேயாகும். இக் குறுகிய காலத்தில் புதிய அமைச்சரவை மாற்றத்தின் மூலம் எதனையும் நாம் சாதித்துவிடமுடியாது. எனவே எஞ்சிய இக்குறுகிய காலத்தில், மாகாண சபையினூடாக வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை ஆற்றுவதற்கு ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட நான்கு அமைச்சர்களிடமும் குறித்த அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கவேண்டுமென முதலமைச்சர் மாண்புமிகு நீதியரசர் அவர்களை தயவுடன் வேண்டுகின்றேன்.

அத்துடன் இவ்வேண்டுதலை இந்த உயரிய சபையில் பிரேரணையாக முன்மொழிந்து நிறைவேற்றுவதற்கு அனைத்து உறுப்பினர்களின் ஆதரவையும் வேண்டிநிற்கின்றேன். – என்று உள்ளது.

(உ)

## மீண்டும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து தான் ஆராய்ந்து வருகிறார் எனவும், முக்கிய தேர்தலுக்குரிய அறிவிப்பு வெளியான பின்னர் தனது அரசியல் பயணம் மீண்டும் ஆரம்பமாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் பொதுச் செயலாளர் பதவிவகித்த திஸ்ஸ அத்தநாயக்க கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ஐ.தே.கவிலிருந்து வெளியேறி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கினார்.

இதனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவரது அரசியல் வாழ்வு கேள்விக்குறியானது.

இப்போது மஹிந்த அணியுடனான அரசியல் உறவுகளையும் அவர் முறித்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலையிலேயே ஐ.தே.கவுக்குள் மறுபடியும் வருவதற்கு அவர் முயற்சித்து வருகிறார் எனக் கூறப்படுகின்றது. அதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், திஸ்ஸ அத்தநாயக்க மறுபடியும் கட்சிக்குள் வருகின்றமையை விரும்ப வில்லை எனவும் கூறப்படுகின் றது.

மாணவர் பருவத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்த திஸ்ஸ அத்தநாயக்க, சுமார் 35 வருடங்களுக்கு மேலாக அக் கட்சியில் அங்கம் வகித்தார்.

மேலும், கட்சித் தலைமைக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் உடனிருந்து ஆதரவு வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் –

மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்குத் தாவி ஒரு குறுகிய காலம் அமைச்சர் பதவியையும் வகித்த அவர், அச்சமயத்தில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அப்போதைய பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் ஒப்பந்தங்களுடனான ஓர் உடன்பாடு என்ற பெயரில் ஓர் ஆவணத்தை ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

அவை தங்கள் ஒப்பம் அல்ல வென்றும், அது போலியான ஆவணம் என்று ரணிலும், மைத்திரியும் முறைப்பாடு செய்தமையை அடுத்து, அது தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்காவுக்கு எதிராகக் கிரிமினல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அவ்விடயம் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் சாட்சியமளிக்க வருமாறு தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நீதிமன்ற அழைப்பு அனுப்பப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சு.க.தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் புதிய வருமான வரிச் சட்டமூலம் குறித்து முன்னாள் ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார்.

புதிய வருமான வரிச் சட்டமூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கு அமைவானது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு அது ஏற்புடையதல்ல.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தும் பங்களிப்பு பணத்திற்கு வரி அறவிடுதல், வாழ்க்கை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நடுத்தர குடும்பங்களின் வரி அதிகரித்தல், சமய வழிபாட்டு இடங்களில் வரி அறவிடுதல் என்பவற்றுக்கு சுதந்திரக் கட்சி இணங்க முடியாது.

இதனால், எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் புதிய வருமான வரிச் சட்டமூலத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்கக் கூடாது எனவும் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## பூஜைக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


தற்போது பாரதூரமான கெட்ட காலம் ஏற்பட்டுள்ளதால், அதற்கு பரிகாரமாக தென் இந்தியாவில் உள்ள கோயிலில் பூஜை ஒன்றை செய்யும் சதாசிவம் என்பவர் யோசனை கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தியா செல்லும் ரணில், 27 ஆம் திகதி நாடு திரும்புவார்.

இலங்கையின் அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் இந்தியாவின் கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள கோயில்களுக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை வழமை. அத்துடன் இந்திய ஜோதிடர்களிடம் தமது அரசியல் எதிர்காலம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றனர்.

ஆந்திராவின் திருப்பதி, தமிழகத்தின் இராமமேஸ்வரம், ஸ்ரீரங்கம், கேரளாவின் குருவாயூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களுக்கு இலங்கையின் அரசியல்வாதிகள் அடிக்கடி சென்று வருகின்றனர்.

# தொடர்ச்சியாக இயங்கும் ரயில் ஒளி சமிக்ஞையால் அசௌகரியத்தில் வவுனியா - தாண்டிக்குளம் மக்கள்!






வவுனியா, தாண்டிக்குளம் ரயில் கடவையில் புதிதாகப் பொருத்தப்பட்ட ஒளிச் சமிக்ஞை கோளாறு காரணமாக தொடர்ந்து ஒளி எழுப்பி இயங்கிக் கொண்டிருப்பதால் அவ்வீதி வழியாகப் போக்குவரத்து செய்யும் மக்கள் ரயில் வருகின்றது என்ற அச்சத்தில் பயணத்தைத் தொடருவதில் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நேற்றுக் காலையில் இருந்து இந்த ஒளிச் சமிக்ஞை தன்னிச்சையாக ஒளி எழுப்பி சிவப்பு லைற் ஒளிர்ந்தபடி இருந்துள்ளது.

இதனால் அந்த ரயில் கடவையூடாக வேலைக்குச் செல்வோர், உயர்தரப் பரீட்சைக்குச்செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் ரயில் வருகின்து எனக் கருதி அவ்விடத்தில் காவல் நின்றதுடன் அசௌகரியங்களுக்கும் உள்ளாகினர்.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் அவ்விடத்திற்கு வந்து போக்குவரத்தை ஒழுங்கு படுத்தியதுடன் வவுனியா மாவட்ட அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார மற்றும் வவுனியா பொலிஸார் ஆகியோருக்கும் தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்திற்கு வந்த அதிபர் மற்றும் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நிலைமையைப் பார்வையிட்டுள்ளமை, அப் பகுதியில் போக்குவரத்து பொலிஸார் நியமிக்கப்பட்டு போக்குவரத்து நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தனர்.

தொடர்ந்தும்ஒளிச்சமிக்ஞை இயங்கு நிலையில் இருப்பதால் ரயில்வேத் திணைக்களத்தின் வடக்குக்கான பிரதான கட்டுப்பாட்டு பிரிவான அனுராதபுரம் ரயில்வேத்திணைக்களத்திற்குத் தெரியப்படுத்த அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, இப்பகுதியிலேயே கடந்த வாரம் ரயில் விபத்து ஏற்பட்டு இளைஞன் ஒருவர் மரணமடைந்திருந்தார் என்பதுடன், வடக்கில் பொருத்தப்பட்டுள்ள ரயில்கடவை ஒளிச் சமிக்ஞைகள் இந்தியாவில் பாவனையில் இருந்து நீக்கப்பட்டவை என வடக்கு கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் சங்கம் அண்மையில் குற்றம்சாட்டி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(க-100)

## காணாமற் போன மாணவியை மீட்க சிறப்பாகச் செயற்பட்ட பொலிஸார்!

கொழும்பு, ஓக. 22

தனியார் வகுப்புக்குச் சென்ற நிலையில், காணாமற் போனார் எனக் கூறப்படும் அனுராதபுரம் பாலாடிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதான பாடசாலை மாணவி, களுத்துறை தெற்கு ஹம்பேகெதர பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியக அதிகாரிகள் மாணவியைக் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த மாணவி காணாமற் போனார் எனக் கடந்த 2ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாணவி தனது தாயாருக்கு கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மகள் காணாமற் போயுள்ளார் என முறைப்பாடு செய்த அவரது தாய், தனது மகள் கடிதம் எழுதியமையை பொலிஸாரிடம் மறைத்துள்ளார்.

இந்த நிலையில், களுத்துறை தெற்கு ஹம்பேகெதர பிரதேசத்தில் வசித்து வரும் 24 வயதான காதலன் வீட்டில் மாணவி இருந்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய அனுராதபுரம் பொலிஸார், நீதிமன்ற உத்தரவைப் பெற்று தொலைபேசி நிறுவனம் ஒன்றிடம் பெற்றுக்கொண்ட அறிக்கையின் அடிப்படையில் விசாரணை நடத்தினர்.

சம்பவம் தொடர்பில் மாணவியின் காதலன், அவரது தாய் மற்றும் சகோதரியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காதலன் மற்றும் அவரது தாயார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உயர்கல்வி பயிலும் சந்தேக நபரின் சகோதரி இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மாணவியை அனுராதபுரம் சாலியபுர பிரதேசத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர் காப்பகத்தில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருமணம் செய்யும் வயது பூர்த்தியாகாத சிறுமியை கடத்திச்சென்றமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சந்தேக நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

## சைட்டம் மருத்துவமனையை கையேற்பது தொடர்பில் நாடாளுமன்றில் பிரேரணை!

கொழும்பு, ஓக. 22

மாலபே நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையை அரசு கையேற்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்று முன்வைக்கப் படவுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அதற்கான பிரேரணையை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம் என அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்டமா அதிபர் திணைக்களத் தின் வரைபுத் திட்டமாக இது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை அரசால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதன் நிர்வாகம் முற்றாக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது.

இதற்கிடையே மருத்துவப் பட்டப் படிப்பு தொடர்பான தரம் மற்றும் விதி முறைகள் தொடர்பான சட்டமூலம் ஒன்றும் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப் படவுள்ளது.

அதற்கான சட்டமூலம் தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் விரைவில் அதனை நாடாளுமன்ற சட்டமூலமாக நிறைவேற்றிக் கொள்ளவுள்ளோம் என்றும் அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார்.

# சைட்டம் கல்லூரிக்கு புதிய மாணவர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்!

**மருத்துவர் நெவில் பெர்னாண்டோ தெரிவிப்பு**

கொழும்பு, ஓக. 22

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்குப் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அதன் தலைவர் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவப் பல்கலைக்கழகமான சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்வேறு தரப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில் புதிய மாணவர்கள் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சுமார் 300 புதிய மாணவர்களை சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவித்துள்ள மருத்துவர் நெவில் பெர்னாண்டோ, உள்நாட்டு மாணவர்கள் 200 பேரும்



வெளிநாட்டு மாணவர்கள் 100 பேரும் இதன்போது உள்வாங்கப்படுவார்கள்என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசின் ஒருசில அமைச்சர்கள் குறித்து விமர்சித்துள்ள மருத்துவர் நெவில் பெர்னாண்டோ, அவர்கள் இரண்டு தோணிகளில் கால் வைத்துள்ளனர் என்றும் சாடியுள்ளார்.

அவ்வாறான அமைச்சர்களை உடனடியாக பதவிகளிலிருந்து நீக்க வேண்டுமென்று தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கிறார் எனவும், அவர்களைப் பதவியில் தொடர விடுவது அரசுக்கு ஆபத்தானது என்றும் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.



தமிழ் நாடு அரசியல்

# தர்ம யுத்தத்தில் வென்ற ஓ.பி.எஸ்.!

ஜெயலலிதா முதல்வராக இருந்த வரை ஓ.பன்னீர் செல்வம் கட்சியிலும் ஆட்சியிலும் இரண்டாம் இடத்தில் மரியாதையுடன் இருந்தார். ஆனால் ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அவருக்கு ஏற்பட்ட பின்னடைவு பெரிதாக பேசப்பட்டாலும் அவர் தொடர்ந்து மக்கள் செல்வாக்கை உயர்த்திக் கொண்டமையை தற்போதைய நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒருவர் அதை திருப்பிக் கொடுத்ததாக வரலாறு இல்லை, ஆனால் "சகோதரர் ஓ.பி.எஸ். முதல்வர் பதவியை என்னிடம் திருப்பித் தந்தவர்" என ஜெயலலிதாவால் புகழப்பட்டவர் ஓ.பி.எஸ். அதனால்தான் ஜெயலலிதா இரண்டு முறை பதவி இழந்த போதும் அவருக்கே முதல்வர் பதவியை அளித்தார். ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் அவரது மறைவுக்குப் பிறகும் ஓ.பி.எஸ். பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

எப்போதும் தன்னை ஜெயலலிதாவின் தீவிர விசுவாசியாக காட்டிக்கொண்டவர் ஓ.பி.எஸ். இதனால் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு ஓ.பி.எஸ். முதல்வராக பொறுப்பேற்றபோது பொதுமக்கள் அவரை ஏற்றுக்கொண்டனர். அதன் பின்னர் தனது பணியை ஆற்றிய ஓ.பி.எஸ். குறுகிய காலத்தில் தனது எளிமையான நடத்தையாலும், தமிழகத்தை பாதித்த குடிதண்ணீர் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை, ஜல்லிகட்டு பிரச்சினை போன்றவற்றைக் கையாண்ட விதமும் அவருக்கு பெருமையைத் தேடித்தந்தது.

குறிப்பாக கிருஷ்ணா நதி நீர் பிரச்சினைக்காக ஆந்திராவுக்கே நேரடியாக சென்று பேச்சுக்களை நடத்தியமையும், ஜல்லிக்கட்டு பிரச்சினையில் டெல்லிக்கு சென்று பேசி அவசர சட்டத்தை நிறைவேற்றியமையும் மக்கள் மத்தியில் ஓ.பி.எஸ்ஸின் மரியாதையை உயர்த்தின. சிக்கலான நேரங்களில் உடனடி முடிவு, எளிமை, ஊடகங்களை தவிர்க்காமல் சந்தித்தமை போன்றவை அவரது மதிப்பை உயர்த்தினாலும் மறுபுறம் அவர் சொந்தமாக முடிவெடுக்க முடியாதவர் என்ற விமர்சனமும் எழுந்தது.

திடீரென ஓ.பி.எஸ்ஸை அமைச்சர்கள் விமர்சனம் செய்தமையையும் அவரை நீக்கியமையையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டமையை மக்கள் கோபத்தோடு பார்த்தனர். அதன் பின்னர் முற்றிலும் ஓரங்கட்டப்பட்ட ஓ.பி.எஸ். தலைவியின் சமாதி முன்பு தியானத்தில் அமர்ந்தமையும், தான் தர்மயுத்தம் தொடங்கினார் என அறிவித்தமையும் அவரது , இமேஜை உயர்த்தின. தனிப்பட்ட செல்வாக்கு என்பதைத் தாண்டி சசிகலா தரப்பின் மீதான மக்களின் கோபம் அவருக்கு ஆதரவாக மாறியது.

மறுபுறம் யாரை ஆதரிப்பது என்ற குழப்பத்தில் இருந்த தொண்டர்களும், சசிகலா தரப்பால் ஓரங்கட்டப்பட்டிருந்த நிர்வாகிகளும் ஓ.பி.எஸ்ஸுக்கு ஆதரவாக திரள கட்சி அணி ஓ.பி.எஸ். பக்கமும், ஆட்சி எதிர்தரப்பு கையிலும் போனது. அதன் பின்னர் சசிகலாவுக்கு முதல்வர் பதவி கிடைக்காமல் போனதும், சிறைத் தண்டனை கிடைத்ததும், எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆட்சி அமைந்ததும் அனைவரும் அறிந்ததே.

அப்போதும் ஓ.பி.எஸ். செல்வாக்கு சரியும் என ஆட்சியில் இருந்தவர்கள் நினைத்தனர். ஆனால் ஓ.பி.எஸ். சென்ற இடமெல்லாம் கூட்டம் சேர்ந்தது. 10 எம்.எல்.ஏக்களுக்கு மேல் யாரும் வராவிட்டாலும் எடப்பாடியை ஏற்று கொள்ளாத கட்சித் தொண்டர்கள் ஓ.பி.எஸ். பக்கம் நின்றனர்.


ஆட்சி கையிலிருந்த போதும் தினகரன் அணியை எடப்பாடி அணியினர் ஒதுக்கியதும் அதன் பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகளும் ஓ.பி.எஸ்ஸுக்கே சாதகமாக அமைந்தன. ஒரு கட்டத்தில் தினகரன் அணியினரை ஒதுக்க ஆட்சியையும் கட்சியையும் காப்பாற்ற ஓ.பி.எஸ். பக்கம் எடப்பாடி அணியினர் இணைய ஆர்வம் காட்டினர்.

எடப்பாடி அணியின் பக்கம் இணைந்தால் அது தனது அணிக்கு எப்படி சாதகமாக இருக்கும் என்பதை நிதானமாக ஆராய்ந்து பின்னர் தன்னுடைய கோரிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னர் எடப்பாடி அணியுடன் தனது அணியை இணைத்துள்ளார். ஓ.பி.எஸ். இந்த இணைப்புக்கு பின்னால் வேறு சில காரணங்கள் கூறப்பட்டாலும், ஒற்றுமையாகத் தனது அணியை கட்டிக்காத்து மக்கள் மத்தியிலும், தொண்டர்கள் மத்தியிலும் தனது செல்வாக்கை வளர்த்து நினைத்ததை சாதித்துள்ளார் ஓ.பி.எஸ்.

அ.தி.மு.கவில் ஜெயலலிதாவுக்கு அடுத்து மக்கள் செல்வாக்கு பெற்ற ஓ.பி.எஸ்., கட்சியிலிருந்து ஒதுக்கப்பட்டாலும் துவண்டு விடாமல் அவர் பாணியில் சொல்லப்போனால் 'தர்மயுத்தம்' நடத்தி அதை தக்கவைத்துக்கொண்டார் என்றே சொல்லலாம்.

அ.தி.மு.க. அணிகள் இணைப்பு சுமுகமாக முடிந்த நிலையில் அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர் செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிசாமியும், துணை ஒருங்கிணைப்பாளராக கே.பி.முனுசாமியும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.






# முன்னாள் போராளிகளே தமிழ் மக்களுக்கு தலைமை வகிப்பதற்குத் தகுதியுடையவர்கள்

## வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரனின் கணிப்பீடு இது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வழிநடத்தலின் கீழ் வளர்க்கப்பட்ட முன்னாள் போராளிகளில் பலர் தமிழ் மக்களை அரசியல் ரீதியாக வழி நடத்திச் செல்வதற்கான தகுதியுடையவர்கள் என வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இதனால் தமிழர்களை வழி நடத்தும் பொறுப்பை அவர்களிடம் வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனின் அலுவலகத்தில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், மீண்டுமொரு ஆயுதப் போராட்டம் இடம்பெற வாய்ப்பு இல்லை எனவும் தமிழ் மக்களை அரசியல் ரீதியாக வழிநடத்திச் செல்வதற்கான தலைமைத்துவத்தைத் தெரிவு செய்யும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

# கட்டுநாயக்கவில் நால்வர் கைது

ஒரு தொகை தங்கத்தை சட்டவிரோதமாக இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முற்பட்ட நான்கு நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தியர் ஒருவரும் மூன்று இலங்கையர்களுமே இவ்வாறு நேற்று அதிகாலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20, 23, 24 மற்றும் 38 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

387.81 கிராம் நிறையுடைய தங்கம் இதன்போது சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 21 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.